வாராந்த சஞ்சிகை
ஜனவரி 20 - 26, 2016

# சுடர் ஒளி

பக்கம் 24
விலை 30/-



# தமிழ்த் தேசியத்துக்கு சவால் விடுத்த பொங்கல்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# உலகின் இரண்டாவது உயரமான கட்டடம்

இளைஞர்கள் குழுவொன்று சீனாவின் ஷாங்காய் நகரிலுள்ள சுமார் 2,000 அடி உயரமான கட்டத்தின் உச்சியில் இரகசிய மாக ஏறி நின்று சுற்றுப்புறங் களைப் படம்பிடித்துள்ளனர்.

ஷாங்காய் கோபுரம் (ஷாங் காய் கோபுரம்) நிர்மாணிக்கப் பட்டுவரும் கட்டடம் சீனாவின் மிக உயரமான கட்டமாக விளங்குகிறது. இது முழுமை யாக கட்டி முடிக்கப்பட்டவு டன் 2,073 அடி உயரமானதாக விளங்கும். உலகின் மிக இரண் டாவது கட்டடம் இதுவாகும்.

அடுத்த வருடம் இதன் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைய வுள்ளன. இந்த நிலையில், 'வடிம் மெகோரோவ், விதாலி ரஸ்கலோவ்' ஆகிய இரு இளைஞர்களும் இந்தக் கட்டத்தின் உச்சியில் ஏறுவதற்கு தீர்மானித்தனர்.

அதிகாரி களின் கண்ணில் படாமல் தப்புவதற்காக இருள்பட ரத் தொடங்கிய பின்னரே இவர்கள் கட்டத்தில் ஏறினர். சுமார் இரு மணித்தியாலங்களின் பின் கட்டத்தின் உச்சியை அடைந்த இருவரும் சுற்றுப்புறத் தில் மேகங் களையும் கடந்து நின்ற கட்டங்களை தமது கமராக் களில் பதிவுசெய்து கொண்டனர்.



பலருக்கு இந்தப் புகைப் படங்களை பார்க்கும்போதே தலைசுற்று ஏற்படக்கூடும். ஆனால், 'மெகோரோவும், ரஸ்கலவோ'வும் அந்தக் கட்டத் தின் உச்சியில் பொருத்தப்பட் டுள்ள பாரந்தூக்கி களின் மீது நின்றும் படங்களைப் பிடித்தனர். இவர்கள் முக்கிய பாதுகாப்பு கவசங்கள் எதையும் அணிந்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நாம் மேலே ஏறும்போது மேகங்கள் மாத்திரமே எமக்குத் தென்பட்டன. மேகங்கள் கலைந்து செல்லும்வரை காத்திருந்தோம். அவை கலைந்த பின் அக்காத்திருப்பு பெறுமதி யானது என உணர்ந்தோம். நாம் மிக அழகிய காட்சிகளைக் கண்டோம்' என இந்த இளை ஞர்கள் தெரிவித்துள்ளனர்.

நாம் கண்ட காட்சிகள் பறக் கும் விமானத்தின் ஜன்னலுக் கூடாகத் தெரியும் காட்சி களைப் போல் இருந்தன. எமது நடவடிக்கைகக்காக நாம் 24 மணித்தியாலங்கள் உறங்காமல் இருந்தோம். இது இருவருக் குமே உள ரீதியாவும் உடல் ரீதியாகவும் மிக சவாலானதாக இருந்தது' என மெகோரோவும், ரஸ்கலவோவும் கூறுகின்றனர்.

# வித்தியாசமான சிற்பி

தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்த சிற்பக் கலைஞர் டோனி ஃப்ரெட்ரிக்சன். காய்ந்து விழும் மரக் கிளைகள், குச்சிகளை வைத்து அற்புதமாக உருவங்களைக் கொண்டு வந்துவிடுகிறார்! உலோகத்தையோ, கற்களையோ செதுக்கி உருவங்களைக் கொண்டு வராமல், சுற்றுச்சூழலுக்கு உகந்த சிற்பங்களை உருவாக்க நினைத்தார். காடுகளில் காய்ந்து விழும் குச்சிகள், மரக் கட்டைகளை வைத்து 2007 ஆம் ஆண்டு முதல் சிற்பங்களை உருவாக்கி வருகிறார்.



எந்த மாதிரி உருவத்தை உருவாக்கப் போகி றேன் என்பதை முடிவு செய்துகொள்வேன். அதற்குச் சில குறிப்புகளை எடுத்துக்கொள் வேன். பிறகு காட்டுக்குள் காய்ந்த குச்சிகளைத் தேடி அலைவேன். ஒவ்வொரு குச்சியை எடுக்கும்போதும் அது எந்தப் பகுதிக்குப் பயன்படுத்த முடியும் என்று யோசித்து வைத்துக் கொள்வேன். அளவு, வடிவம் என்று பிரித்து தனித் தனிக் குச்சிகளாகச் சேர்த்துக்கொள்வேன். பிறகு உருவங்களை உருவாக்கிவிடுவேன்.

நாய், காண்டா மிருகம், நெருப்புக் கோழி என்று ஏராள மான உருவங் களைச் செய்து என் அருங்காட்சியகத் தில் வைத்திருக் கிறேன். என் உருவாக்கத்தைத் தான் பாராட்டு கிறார்களே தவிர, இயற்கையைப் புரிந்துகொள்ள யாரும் முயற்சி கூட செய்வதில்லை. 2010-ம் ஆண்டு ஒரு கண்காட்சி நடத்தினேன். அதில் மீன்களையும் மாசாய் வீரர்களையும் காட்சிப்படுத்தினேன். அதற்கடுத்த ஆண்டு பறவைகளை மட்டும் காட்சிக்கு வைத்தேன். கற்பனைத் திறன் இருந்தால் யார் வேண்டுமானாலும் இதைச் செய்யலாம்" என்கிறார் டோனி.

# உலகின் உயரமான குகைப் பாலம்

குகையைக் குடைந்து வீதிகள் போடுவதைப் பார்த் திருப்போம். பள்ளத்தாக்குகளைக் கடக்கப் பாலங்கள் போடப்படுவதையும் பார்த்திருப்போம். மலைக் குகை யையும், பள்ளத்தாக்குப் பாலத்தையும் ஒருசேரப் பார்க்க முடியுமா? முடியும். சீனாவில் நிஜமாகவே இப்படி ஒரு பாலம் இருக்கிறது.

சீனாவில் ஹுனான் மாகாணத்தில் அய்ஸாய்'என்ற பாலத்தைக் கடந்த 2012ஆம் ஆண்டில் திறந்தார்கள். ஜிஷோ மற்றும் ஸடோங் ஆகிய நகரங்களை இணைக்க இந்தப் பாலத்தைக் கட்டினார்கள். இந்த இரண்டு நகரங்களும் வெவ்வேறு மலைத்தொடர்களில்



உள்ளன.

ஒரு நகரத்திலிருந்து இன்னொரு நகரத்துக்குப் போக, ஒரு மலையிலிருந்து இறங்கி, இன்னொரு மலையில் ஏற வேண்டும். வளைந்து செல்லும் மலைப்பாதை வழியாகச் செல்ல சாலை வசதி உள்ளது. ஆனால், இரண்டு மலை களையும் பிரிக்கும் 1,102 அடி ஆழ பள்ளத்தாக்கின்மீது தொங்குபாலம் கட்ட முடிவெடுத்தார்கள். பிரம்மாண் டமான இரும்புக் கம்பிகள் பாலத்தைத் தாங்கிப் பிடிக்க 1,146 மீற்றர் தூரத்துக்கு இந்தத் தொங்கு பாலம் கட்டப்பட்டது.

இருபுறமும் மலைகளைக் குடைந்து சாலை அமைத்து, பாலத்தோடு இணைத்திருக்கிறார்கள். உலகின் உயரமான குகைப் பாலம் என்ற பெருமையைப் பெற்றிருக்கிறது இது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் தொட்டில் பழக்கம்

- ஆசாத்



அண்மையில் எம்பிலிப்பிட்டிப் பகுதியில் பொலிஸாருக்கும் ஒரு வீட்டில் இடம்பெற்ற விருந்துபசாரத்தில் கலந்து கொண்டவர்களுக்கிடையே இடம்பெற்ற மோதலில் ஒரு குடும்பஸ்தர் கொல்லப்பட்டுள்ளார்.

விருந்துபசாரம் இடம்பெற்ற போது சிவில் உடையில் வந்த பொலிஸார் மது கேட்டதாகவும் அது வழங்க மறுக்கப்பட்ட போது இரு தரப்பினரிடையே தகராறு ஏற்பட்டதாகவும், சிறிது நேரத்தில் அங்கு வந்து சேர்ந்த பல பொலிஸார் விருந்தில் கலந்து கொண்டிருந்த பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும், இந்தத் தாக்குதலின் போது ஒருவர் மாடியிலிருந்து விழுந்ததாகவும் அவர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் பொலிஸாரோ விருந்து இடம்பெற்ற வீட்டில் மோதல்கள் இடம்பெறுவதாக வந்த தொலைபேசி அழைப்புக்கள் காரணமாகத் தாம் அங்கு சென்று நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்ததாகத் தெரிவித்துள்ளனர்.

ஆனால் இச்சம்பவம் தொடர்பாக மக்கள் கொதித்தெழுந்து ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். கடையடைப்பு நடத்தி அவர்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டனர். கலகமடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டு நிலைமைகளை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டன. அதே வேளையில் எம்பிலிப்பிட்டி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த, பொறுப்பதிகாரி உட்பட 21 பொலிஸாருக்கு உடனடியாக இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பிக்கப் போவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே வேளையில் இறந்தவர் தொடர்பான பிரேத பரிசோதனை அறிக்கையில் வெட்டுக்காயங்களால் ஏற்பட்ட மரணம் எனத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் பொதுமக்களோ மாடியிலிருந்து பொலிஸ் தாக்குதலின் போது விழுந்ததாலேயே உயிரிழப்பு ஏற்பட்டதெனத் தெரிவித்துள்ளனர். அவர்கள் பிரேத பரிசோதனையை ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை.



இக்கொலைச் சம்பவத்திலிருந்து பொலிஸாரைத் தப்ப வைப்பதற்காக உண்மைக்குப் புறம்பான வகையில் அறிக்கை தயாரிக்கப்பட்டிருப்பதாகக் குற்றம் சாட்டுகின்றனர். இப்படியான சந்தேகம் ஏற்படுவதற்குக் காரணம் இல்லை எனச் சொல்லிவிட முடியாது.

சில வருடங்களுக்கு முன்பு இடம்பெற்றதாகக் கூறப்படும் ரக்பி வீரர் வாசிம் தஜுதீனின் மரணம் தொடர்பான அறிக்கை யில் அது ஒரு விபத்து மரணம் எனச் சட்ட வைத்திய அதிகாரியால் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அண்மை யில் அவரின் உடல் மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டு பரிசோதனைகள் நடத்தப்பட்ட நிலையில் அது ஒரு கொலை எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பொலிஸாரின் அழுத்தங்கள் காரணமாகச் சட்ட வைத்திய அதிகாரி உண்மையை மறைத்தார் எனக் குற்றம் சாட்டப்பட்ட நிலையில் அவர் நீதிமன்றுக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

இப்படியான நிலையில் பொலிஸாரைக் காப்பாற்றும் நோக்கில், பிரேத பரிசோதனை அறிக்கையில் உண்மைகள் மறைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுவது தவிர்க்க முடியாததாகும்.

சில மாதங்களுக்கு முன்பு எச்.என்.டி.ஏ. மாணவர்கள் தமக்கு வழங்கப்படும் பட்டங்களுக்கு பல்கலைக்கழகப்பட்டத்துக்குச் சமமான அந்தஸ்து வழங்கப்பட வேண்டுமெனக் கோரிக் கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். பொலிஸார் அந்த ஆர்ப்பாட்டத்தின் மீது நடத்திய தடியடி, கண்ணீர்ப்புகை என்பன காரணமாகப் பல மாணவ , மாணவியர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத் திய மனித உரிமைகள் ஆணைக் குழு, இதில் பொலிஸாரால் அரசியலமைப்பின் 13ஆவது சரத்துகள் மீறப்பட்டுள்ளதாகத் தெரிவித்ததுடன், காயமடைந்த மாணவிக்கு 25,000 ரூபாவும் காயமடைந்த 8 மாணவர்களுக்கு 15,000 ருபாவும் நட்டஈடு வழங்க வேண்டும் எனத் தீர்மானித்ததுடன், சம்பந்தப்பட்ட பொலிஸார் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்திருந்தது. ஆனால் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் இந்தத் தீர்ப்பை இரத்துச் செய்யும்படி கோரி பிரதி பொலிஸ்மா அதிபர் உயர்நீதி மன்றத்தில் மனுச் செய்துள்ளார்.

அது மட்டுமன்றி நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவும் மனித உரிமைகள் ஆணைக்குழு தனது வரையறையை மீறிச் செயற்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநிறுத்த வேண்டிய பொலிஸார் தாங்களே சட்ட மீறலில் ஈடுபடும் போது அவர்களை பொலிஸ்மா அதிபர் திணைக்களமும், நீதியமைச்சரும் காப்பாற்ற முயல்வது நாடு மீண்டும் கடந்த அரசாங்கத்தின் காலத்தில் நிலவிய காட்டாட்சியை நோக்கித் திருப்பிச் செல்கிறதா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

அதே போன்று சிறுமி சேயாவின் வன்புனர்வு ,கொலை தொடர்பாக ஒரு பாடசாலை மாணவனும், ஒரு குடும்பஸ்தாரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். பின்பு அப்பிரச்சினைகள் தொடர்பாக கொண்டையா என்பவன் கைது செய்யப்பட்டதை அடுத்து அவர்கள் விடுவிக்கப்பட்டனர். கொண்டையாவின் சகோதரன் தானாகவே வந்து தானே அந்தக் கொலையைச் செய்ததாக ஒப்புக் கொண்ட நிலையில் கொண்டையாவும் விடுவிக்கப்பட்டான். மாணவனும், குடும்பஸ்தாரும் தாங்கள் ஒப்புதல் வாக்கு மூலம் வழங்கும் படி வற்புறுத்தப்பட்டுக் கடுமையாகத் தாக்கப்பட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தனர். கொண்டையாவும் தன்னைச் சித்திரவதை செய்து தன்னிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தான். இவற்றின் மூலம் பொலிஸார் உண்மையான குற்றவாளிகளைப் பிடிக்க முடியாத கையாலாகத்தனத்தை மறைக்க அப்பாவிகளைக் குற்றவாளிகளாக்கும் அநீதி வெளிப்படுத்தப்பட்டது.



(22 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாதா தாவூத் இப்ராஹிம்

சன். சரவணக்குமார்

லண்டனைச் சேர்ந்த பெரும் புள்ளிகளுக்கு சிங்கப்பூரில் வைத்து வரி கட்டாமல் விற்றும் வந்தார். அடிக்கடி வந்து போனதால் இவர் சுற்றுலாவுக்கு வரவில்லை ஏதோ செய்கிறார் என்று இந்திய சுங்க அதிகாரிகள், அவர் மீது சந்தேகப் பார்வையை செலுத்தினர். அதற்கு ஏற்றாற்போல மும்பையில் இவரது நடவடிக்கைகள் இருந்தன. மும்பையின் தாதாக்களான கரீம் லாலாவுக்கும், ஹாஜி மஸ்தான் என இருவருக்கும் நெருக்கமாக இருந்தார். இருவருக்கும் அன்பளிப்புகளை அள்ளி வழங்கினார். தனது தொழிலில் எந்த வித பின்னடைவும் வந்துவிடக்கூடாது என்று மும்பையின் மிகப்பெரிய தலைகளுக்கு தானாக முன்வந்து சலுகைகள் செய்து வந்தார். அதனால் மார்வாடி சமூகத்தை சேர்ந்த வைர வியாபாரின் உண்மையான பெயர் மறைக்கப்பட்டு லால் சேட் என்றால் மும்பையின் அனைத்து பெரும் புள்ளிகளுக்கும் தெரிந்து இருந்தது. இந்த விஷயம் மெல்ல மெல்ல பொலிஸ், சுங்க அதிகாரிகளுக்கும் தெரிந்து இருந்தது. யாரையும் பகைத்துக்கொள்ள மாட்டார் வைர வியாபாரி. அரசுக்கு கட்ட வேண்டிய வரிப் பணத்தைக் கட்டாமல் அதிக அளவில் கறுப்புப் பணத்தை வைத்து இருந்தார். வரி கட்ட வேண்டிய பணத்தின் சிறிது அளவை அந்தந்தத் துறையின் அதிகாரிகளுக்கு கொடுத்து வந்தார். அதனால் பல்வேறு அதிகாரிகளும் அவருக்கு நெருக்கமாக இருந்தார்கள். ஒரு சில நேர்மையான அதிகாரிகளும் இருந்து வந்ததால் வைர வியாபாரியை திட்டமிட்டு மடக்கக் காத்திருந்தனர். மிக விலையுயர்ந்த வைரக்கற்கள் அடங்கிய ஒரு பெட்டியை சிங்கப்பூரில் இருந்து இந்தியாவுக்குக் கொண்டுவர வேண்டும். அந்தக் கற்களின் மதிப்பு அப்போதே இரண்டு கோடிகள். சுங்க அதிகாரிகள் தன்னை மடக்கப்போவதாக லால் சேட்டுக்குத் தகவல் வந்தது. சிங்கப்பூர் சென்றால் வழக்கமாகச் செல்லும் ஒரு ஹோட்டல் ஒன்று இருந்தது. அந்த ஹோட்டலில் மும்பையைச் சேர்ந்த ஒருவன் வேலை செய்து வந்தான். அவனின் உபசரிப்பில் கொஞ்ச நாளில் அவனையும் தன்னுடைய ஆளாகப் பயன்படுத்திக்கொண்டான் லால் சேட். அதனால் சிங்கப்பூரில் லாலுக்கு வலதுகரமாக இருந்துவந்தான் மும்பைக்காரன். தன்னை இந்திய அதிகாரிகள் கைதுசெய்தால் எளிதாக வெளியே வந்து விடலாம், சிங்கப்பூர் அரசு கைது செய்தால் வெளியே வரமுடியாது. மரண தண்டனைகூட கிடைக்க வாய்ப்பு இருக்கிறது என்று பயந்த லால், தங்கி இருந்த ஹோட்டலில் இருந்து நேராக கிளம்பி மும்பைக்காரன் அறையில் அந்த வைரக்கற்களை அவனது கழிவறையில் அவனுக்கே தெரியாமல் ரகசியமாக வைத்துவிட்டு உடனடியாக இந்தியாவுக்கு 'ஃபிளைட்' பிடித்தான். இந்தியாவில் லால் சேட்டை மடக்கி பயங்கர சோதனைகள் செய்தார்கள். நடந்த எல்லா சோதனைகளிலும் எதுவும் கிடைக்கவில்லை. வெறும் சிரிப்பை மட்டும் உதிர்த்துவிட்டு வீடு வந்துசேர்ந்தான் சேட். ஒரு மாத காலம் ஆகிவிட்டது. பண நெருக்கடியால் சேட் சிக்கி தவித்து நின்றான். வேறு வழியில்லாமல் பல்வேறு நபர்களின் உதவிகளை நாடினான். பல்வேறு நபர்கள் சிரமம் எடுத்தும் வைரக்கற்களை இந்தியாவுக்குக் கொண்டுவர முடியவில்லை. கடைசியாக தாவூத்திடம் வந்தான். தாவூத் அதற்கு கைமாறாக பாதிக்குப் பாதி பங்கு கேட்டான். சேட்டும் ஒப்புக்கொண்டு எப்படியாவது வைரம் வந்தால் போதும் என்று தாவூதின் டீலுக்குத் தலையாட்டினான். வைரத்தை சொன்னபடி சொன்ன திகதியில் லாலிடம் கொண்டுவந்து சேர்த்தான் தாவூத். மிரண்டு போனான் லால். என்ன செய்வது என்று தெரியாமல் தாவூத்துக்கு சலாம் அடித்து நன்றி கூறினான். எப்படிக் கொண்டுவந்தாய் என்று சேட் எத்தனையோ முறை கேட்டும் தாவூத் அதனைப்பற்றி வாய் திறக்கவே இல்லை. ஆனால் அந்த ரகசியம் தாவூதின் சகோதரருக்கும்,தாவூத்தின் நண்பர்களுக்கும் மட்டுமே தெரிந்து இருந்தது.

பயங்கரமான கண்காணிப்பு வளையத்தில் இருந்து வந்த லால் சேட்டின் வைரத்தை சிங்கப்பூரில் இருந்து மும்பைக்குக் கொண்டுவர பல்வேறு சிரமங்கள். கெடுபிடிகள் இருந்து வந்தன. அந்த நேரம் பார்த்து சிங்கப்பூரில் வேலை செய்துவந்த தாவூத்தின் கூட்டாளி ஒருவனின் உறவினர் விபத்து ஒன்றில் இறந்து விட இறந்தவனின் உடலை மும்பைக்குக் கொண்டுவர முடியாமல் தவித்து வந்தனர். இந்த விஷயம் தாவூத்துக்குத் தெரிய வந்ததும் அதனை வைத்து இரண்டு திட்டங்கள் தீட்டினான். இறந்தவரின் உடலைக் கொண்டுவர எல்லா ஏற்பாடுகளும் செய்துதருவதாக வாக்குக் கொடுத்துவிட்டு, தனது கூட்டாளி இஜாஜாஸ் என்பவனை உடனடியாக சிங்கப்பூர் அனுப்பினான். அங்கே வழக்கமாக செய்யக்கூடிய எல்லா வேலைகளையும் செய்துவிட்டு, ஜெனெரல் மருத்துவமனையில் இருந்த பாடியை வாங்கினார்கள். அங்கிருந்து விமானநிலையம் வரும் வழியில் ஒரு சிலரின் உதவியோடு இறந்தவனின் உடலில் வைரக்கற்களை மறைத்து வைத்துவிட்டான் இஜாஜாஸ். மரத்தினால் ஆன சவப்பெட்டியை ரெடி செய்து அதனுள் பிரேதத்தை வைத்து, சிங்கப்பூரில் இருந்த அதிகாரிகளின் கண்ணில் மண்ணை தூவி விட்டு பத்திரமாக இந்தியா செல்லும் விமானத்தில் ஏற்றிவிட்டனர். அதே சமயம் அங்கு பத்திரமாக வந்தாலும், இந்தியாவில் இருந்து தாவூத்தின் ஆட்களின் சிங்கப்பூர் பயணத்தின் உள்நோக்கம் பற்றி தெரிய முடியாமல் குழம்பி இருந்தனர். பொதி உள்பட இறந்த உடலினை பரிசோதனை செய்யும் அதிகாரி ஒருவனுக்கு லம்பாக ஒரு தொகையை கொடுத்து தாவூத்தின் ஆட்கள் சரிசெய்து வைத்து இருந்தனர். சிறிய அளவில் எலெக்ட்ரானிக் பொருட்கள் மட்டும் வருகிறது. அதைக் கண்டுகொள்ளாமல் விடவேண்டும் என்று சொல்லி இருந்தனர். வைரம், வரும் கதையை மறைத்து இருந்தனர். சொன்னபடி தாவூத்தின் நண்பன் பிணத்தின் சவப்பெட்டிக்குள் ஒரு சில கடிகாரங்கள், ட்ரான்ஸ்சிஸ்டர்கள் என்று மறைத்து வைத்து கொண்டுவந்தான். சோதனை செய்யும் இடம் வந்ததும் மேலோட்டமாகப் பார்த்த அதிகாரி கண்டுகொள்ளாமல் அனுப்பிவிட்டார். எல்லா சோதனைகளும் முடிந்து மும்பையில் இருந்து பிணம் நேராக நெடுஞ்சாலையில் வந்து கொண்டு இருந்தது. இடையில் இடைமறித்த தாவூத் வைரங்களை மட்டும் வாங்கிவிட்டு பிணத்தை அனுப்பிவிட்டான். இப்படிதான் தாவூத் யாரும் செய்ய முடியாத செயலை துணிந்து செய்தான். பல்வேறு பொருளாதார நெருக்கடிகளில் இருந்து லால் விடுவிக்கப்பட்டான். அதே நேரத்தில் மிகப்பெரிய பணத்தை ஒரே வேலையில் முழுதாகக் கையில் பார்த்தான் தாவூத். நடந்த சம்பவங்கள் மெல்ல மெல்ல கரீம் லாலாவுக்கும் மஸ்தானுக்கும் தெரியவந்தது. ஆனால் எப்படிச் செய்தான் என்று யாருக்கும் கடைசிவரை கண்டுபிடிக்க முடியவில்லை. எல்லாச் சம்பவங்களிலும் அடாவடித்தனம் கை கொடுக்காது என்று பல்வேறு நபர்கள் உணரத் தொடங்கினர். தாவூத்தின் திறமையைப் பற்றி வெளியே எல்லோரும் இந்த சம்பவம் பற்றி பேசி முடிப்பதற்குள் தாவூத் அடுத்த கட்ட வளர்ச்சியை எட்டி இருந்தான். இனக் குழுக்கள் போலக் கடத்தல் குழுக்களும் மும்பையில் நிரம்பி இருந்தன. அதனால் அரசுக்குப் பெரும் நெருக்கடியான சூழல் நிலவி வந்தது. இந்தியாவின் பெரும் வரி ஏய்ப்பு சம்பவங்கள் மும்பை, குஜராத், டெல்லி உள்பட பல்வேறு இடங்களில் அரசுக்கு தெரிந்தே நிகழ்ந்து வந்தது. போதிய ஆதாரங்கள் இல்லாமல் அரசு வேடிக்கை மட்டும் பார்த்து வந்தது.



(தோட்டக்கள் பாயும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரே கூண்டில் ஆடு, புலி

ரஷ்யாவில் உள்ள பிரைமோர்ஸ்கி சஃபாரி சரணாலயத்தில் வசிக்கிறது அமுர் என்ற 3 வயது சைபீரியப் புலி. அங்குள்ள ஊழியர்கள் புலிக்கு வாரம் இருமுறை முயல்களையும் ஆடுகளையும் வெட்டி. இறைச்சியை புலியின் கூண்டில் வைத்துவிடுவார்கள். ஆனால் கடந்த மாதம் புலியின் உணவுக்காக டிமுர் என்ற ஆட்டை உயிருடன் கூண்டுக்குள் அனுப்பி வைத்தனர். மறுநாள் ஆடு உயிருடன் இருக்கப் போவதில்லை என்று நினைத்தோம். என்ன ஆச்சரியம். இரண்டும் நண்பர்களாகிவிட்டன.

புலியும் ஆடும் ஒன்றாக நடை பயில்கின்றன. ஒன்றாக விளையாடுகின்றன. ஒன்றாக ஓய்வெடுக்கின்றன. புலியையும் ஆட்டையும் வேறு வேறு கூண்டுக்குள் அனுப்பிவைக்க முயன்றோம். புலி இடத்தைவிட்டு நகர மறுத்தது. ஆடு தூங்காமல், சாப்பிடாமல் அடம்பிடித்தது. மறுநாள் ஒரே கூண்டில்விட்ட பிறகுதான் ஆடும் புலியும் இயல்பு நிலைக்கு வந்தன. மீண்டும் நட்பைத் தொடர்ந்தன. ஒன்றரை மாதங்களுக்குப் பிறகும் நட்பு நீடிக்கிறது என்கிறார் பார்க் அதிகாரி. ஆடு. புலியின் கூடா நட்பு நீண்ட நாட்கள் நிலைக்காது. எப்போது புலிக்குப் பசி எடுக்கிறதோ. அன்று ஆடு பலியாகிவிடும். விரைவில் இது நடக்கும் என்கிறார் பயோடைவர்சிடி ஒருங்கிணைப்பாளர் விளாடிமிர் க்ரெவெர். புலியும் ஆடும் தலையை இடித்துக்கொண்டு. தண்ணீர் பருகும் காட்சியை உலகில் வேறு எங்கும் பார்த்திருக்க முடியுமா?

எரிமலை வெடித்த குகைகளுக்குள் 36,000 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த பழங்கால மனிதர்கள் வரைந்த அற்புதமான ஓவியங்களை தொல்பொருள் துறை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

தென் கிழக்கு பிரான்ஸில் உள்ள Ardeche பகுதியில் Chauvet என்ற பழங்கால குகைகளை ஆராய்ச்சியாளர்கள் கடந்த 1994ஆம்





# 36,000 வருடங்கள் பழைமையான குகை ஓவியங்கள்

ஆண்டு கண்டுபிடித்தனர்.

சுமார் 40,000 ஆண்டுகளுக்கு முன்னதாக இந்தப் பகுதியில் உள்ள ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எரிமலைகள் வெடித்திருக்க வேண்டும்.

இதனை இந்த சுற்றுப்பகுதியில் வசித்த பழங்கால மக்கள் கண்டுமிருக்கலாம் என கூறப்படுகிறது.

மேலும், பல ஆயிரக்கணக்கான வருடங்களாக பழங்கால மனிதர்கள் இதுபோன்ற குகைகளில் தங்கியுள்ளனர்.

அப்போது, அவர்கள் தினமும் பார்க்கும் விலங்குகளை அங்குள்ள சுவர்களில் வரைந்து வருவது அவர்களின் பொழுது போக்காகும்.

இவ்வாறு நீளமான தந்தங்கள் உடைய யானைகள், புலிகள், சிங்கம், குரங்கு உள்ளிட்ட விலங்குகளின் உருவங்களை ஓவியமாக வரைந்துள்ளனர்.

அதே சமயம், இந்த குகைப்பகுதியில் எரிமலை வெடித்தற்கான அடையாளங்களும் அப்படியே உள்ளன.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

sudarolijaffna@gmail.com

361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021 492 7419


## குற்றச் செயல்களற்ற மாவட்டமாக யாழ்ப்பாணத்தை மாற்றும் நற்பணி

குற்றச்செயல்கள் இடம்பெறாத பிரதேசமாக, யாழ்ப்பாண மாவட்டத்தை மாற்றுவதற்கு நீதித் துறையினர் திடசங்கற்பம் பூண்டுள்ளனர்.

இந்த மாதம் முதலாம் நாளில், அரச உத்தியோகத்தர்கள் உறுதிமொழி எடுக்கும் வைபவத்திலே, மேல்நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் மேற்கண்ட நிலைப்பாட்டை வெளிப்படுத்தி இருந்தார்.

கடந்து சென்ற 2015 ஆம் ஆண்டில் நடைபெற்றிருந்த பெண்களுக்கு எதிரான வன்முறைகள், போதைப்பொருள் பாவனை ஆகியவற்றை தொட்டுக் காட்டிக் கவலை தெரிவித்திருந்த மேல் நீதிமன்ற நீதிபதி, சட்டங்களை மதிக்கின்ற மாவட்டமாக மாற்ற வேண்டும் என்று அறைகூவல் விடுத்ததை இங்கு விசேடமாகக் கருத்தில் கொள்ள வேண்டும்.

யாழ். மாவட்டத்தில், வகை தொகை இன்றிக் குற்றச்செயல்கள் அதிகரித்து வருவது, எமது சமூகம் - மிகக் குறிப்பாக இளம் வயதினர் கெட்டழிந்து போகும் நிலைக்கான தறிகெட்ட சூழலை மிகமிக மேலுயர்த்துகிறது.

குற்றம் செய்தவர்கள் ஏதோ வகையில் தண்டனையில் இருந்து தப்பிக் கொள்ளும் அல்லது விலக்களிக்கப்படும் போக்கு- குற்றச்செயல்கள் கண்டும் காணப்படாத போக்கு -குற்றம் இழைப்பதற்கு ஊக்குவிக்கும் போக்கே அதிகரித்துள்ளது. இது குறித்துப் பொறுப்பு வாய்ந்த தரப்புக்கள் பலவும் கவலை வெளியிட்டதையும் இங்கு தொட்டுக் காட்டலாம்.

இத்தகைய பின்புலத்தில், சட்டங்களை மதிக்கின்ற மக்கள் வாழும் மாவட்டமாக இந்த ஆண்டை மாற்றுவதற்கு அனைத்து நீதிபதிகளும், நீதித்துறை சார்ந்த உத்தியோகத்தர்களும் திடசங்கற்பம் பூணுவதாக உறுதி எடுத்துள்ளமை, நம்பிக்கைக் கீற்றை உற்பவிக்கின்றது.

நீதித்துறையினர் மட்டுமன்றி,எமது மாவட்டத்தின் சமூக, சமய நிறுவனங்கள், நல்லாட்சியை நாடி நிற்கும் மக்கள் என்று எல்லாத் தரப்பினரும் ஒன்றிணைந்து ஒரு புதுமையை மட்டுமன்றி புரட்சி நிலையையும் உருவாக்கலாம்.

இது காலத்தின் பிரதான தேவை மட்டுமன்றி, தட்டிக்கழிக்க இயலாத கடைமையுமாகும். இதனை உள்வாங்கி, உணர்ந்து செயற்பட வேண்டிய வேளை இது என்பதை ஒவ்வொருவரும் தமது மனதிருத்தித் தப்பாது செயற்படுத்த முன்வருக.

இலங்கை அரசாங்கம் சிங்கள மக்களின் அரசாங்கம்; தமிழ் மக்களை உதாசீனப்படுத்தும் அரசாங்கம் என்ற எண்ணம்

இருந்து சிங்கள மக்களை விடுவிக்க வேண்டும் என ஜனாதிபதி மைத்திரியும் பிரதமர் ரணிலும் முயற்சி செய்கின்றனர்.

திட்டமிடப்பட்டது. ஜனாதிபதியும் பிரதமரும் தேசிய பொங்கல் விழாவில் கலந்துகொள்வார்கள் என அறிவிக்கப்

# தமிழ்த் தேசியத்துக்கு சவால்விடுத்த பொங்கல்

தொடர்ந்தும் தமிழ் மக்களின் மனதில் இருக்கிறது. அந்த

ஜனாதிபதி முன்னெடுக்கும் நல்லெண்ண சமிக்ஞைகள் தமிழ்

பட்டது. ஆனால், தேசியப் பொங்கல் விழாவில் ஜனாதிபதி கலந்து கொள்ளவில்லை. பிரதமர் ரணிலின் தலைமையில் தேசியப் பொங்கல் விழா நடந்தது. உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள பலாலி கண்ணார் வயல் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் பொங்கல் விழாவும், வீரசிங்கம் மண்டபத்தில் கலைவிழாவும் நடைபெற்றன.



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சிறுவர் மற்றும் மகளிர் விவகார ராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் நாடளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா ஆகியோர் பலாலியில் நடைபெற்ற பொங்கல் விழாவில்

எண்ணத்தைக் களைவதற்காக இன்றை அரசாங்கம் மிகச்சிரமத்தின் மத்தியில் காரியமாற்றுகிறது. சிங்கள மக்களைத் திசை திருப்பும் சில அரசியல்வாதிகள் அதனைத்

மக்களின் மனதில் அவரைப்பற்றிய புதியதொரு சிந்தனையை உருவாக்கி உள்ளன.

தமிழர் திருநாளான தைப்பொங்கலை தேசியப் பொங்கலாக

**உயர் பாதுகாப்பு வலயத்தில் பொங்கல் நடைபெற்ற இந்த விழாவுக்கான முன்னேற்பாடுகள் அதி உச்ச பாதுகாப்புடன் நடைபெற்று முடிந்தன. பொங்கல் விழாவில் கலந்து கொள்ள விரும்பியவர்களின் பெயர்கள் முன்கூட்டியே பதிவு செய்யப்பட்டது. பொங்கல் விழாவுக்குச் சென்றவர்கள் கடுமையாக சோதனை செய்யப்பட்டனர். மாலை பொன்னாடை என்பனவும் படையினரின் சோதனைக்குத் தப்பவில்லை.**

தமக்குச் சாதகமாக்க முயற்சிக்கின்றனர். கடும் தீவிரவாதப் போக்கில்

யாழ்ப்பணத்தில் நடத்தி நல்லெண்ணத்தை வெளிப்படுத்தத்

கலந்துகொண்டனர். உயர் பாதுகாப்பு வலயத்தில் பொங்கல்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்ற இந்த விழாவுக்கான முன்னேற் பாடுகள் அதி உச்ச பாதுகாப்புடன் நடைபெற்று முடிந்தன. பொங்கல் விழாவில் கலந்து கொள்ள விரும்பியவர்களின் பெயர் முன்கூட்டியே பதிவு செய்யப்பட்டது. பொங்கல் விழாவுக்குச்

பொய்யல்ல. பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட்டு அங்கிருக்கும் படையினர் வெளியேற வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு.

வடக்கில் உள்ள இராணுவத்தின் பெரும் எண்ணிக்கையைக் குறைக்கப்போவதில்லை என அழுத்தம் திருத்தமாக

வடமாகாண முதல மைச்சர் சீ.விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். பிரதமருக் கும் வட மாகாண முதல மைச்சருக்கும் இடையே முறுகல் ஆரம்பித்து விட்டதாக கடந்த காலத்தில் மின்னிய தலைப்புச்செய்திகள் மங்கிவிட்டன. இருவரும்



**உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்த கோவில்கள், பாடசாலைகள், வீடுகள் என்பன படையினரால் அழிக்கப்பட்டுள்ளன. அவை இருந்த அடையாளமே இப்போது இல்லை. இந்த நிலையில் பரிகாரம் தேடும் நோக்கில், அங்கு தப்பிப்பிழைத்த ஆலயத்தில் பொங்கிப் படையலிட்டார்கள்.**

சென்றவர்கள் கடுமை யாக சோதனை செய்யப் பட்டனர். மாலை பொன் னாடை என்பனவும் படையினரின்

இதுவரைகாலமும் கூறிவந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சற்றுக் கீழிறங்கி வந்து வடக்கில் உள்ள படையினர் வேறு

கைலாகு கொடுத்து மகிழ்ச்சியுடன் உரை யாடினர்.

முதலமைச்சர் சீ.விக்னேஸ்வரனும்



சோதனைக்குத் தப்ப வில்லை.

உயர் பாதுகாப்பு வல யத்தில் இருந்த கோவில் கள், பாடசாலைகள், வீடுகள் என்பன படை யினரால் அழிக்கப்பட் டுள்ளன. அவை இருந்த அடையாளமே இப்போது இல்லை. இந்த நிலையில் பரிகாரம் தேடும் நோக்கில், அங்கு தப்பிப்பிழைத்த ஆலயத் தில் பொங்கிப் படைய லிட்டார்கள். அரசாங் கத்தின் தேசியப் பொங் கல்விழாவில் விருப்ப மின்றி கலந்து கொண்ட

இடங்களுக்கு மாற்றப்படுவர்கள் என்றார். வடக்கில் நிலவும் சமாதானச் சூழல் படையினரின் எண்ணிக் கையைக் குறைக்க உதவும் என்றார். இந்திய மீனவர்களின் அத்து மீறல் முற்றாக ஒழியும் வரை வடக்கில் உள்ள கடற் படையினரின் எண் ணிக்கை குறைக்கப்பட மாட்டாது என்ற குண்டை பிரதமர் தூக்கிப்போட்டுள்ளார்.

வீரசிங்கம் மண்ட பத்தில் நடந்த கலாச்சார நிகழ்ச்சியில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவும் தேசியப் பொங்கல் விழாவில் கலந்து கொண்டது அரசாங் கத்துக்கு 'வெற்றியை'

கொடுத்துள்ளது.

வடமாகாண சபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கமும் அனந்தியும் தேசியப் பொங்கல் விழாவை எதிர்த்து யாழ்ப்பணத் தில் கறுப்புக்கொடி ஏந்தி ஆர்ப்பட்டம் செய்தனர். தமிழ் அரசியல் கைதிகளை விடுதலைசெய்ய வேண்டும்; காணாமல் போனவர்கள் கண்ட றியப்பட வேண்டும். பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட வேண் டும் என்ற கோரிக்கைகள் அவர்களினால் முன்மொழியப்பட்டன.

அவர்களின் கோரிக்கைகள் தவறனவை அல்ல. ஜனாதிபதியும் பிரத மரும் யாழ்ப் பாணத்துக்கு விஜயம் செய்யும் நாளில் ஆர்ப் பட்டம் செய்யாது இரண்டு நாட்களுக்கு முன்னர் ஆர்ப்பாட்டம் செய்து தமது எதிர்ப்பை வெளிக் காட்டி இருந்தனர். தலைவர்கள் வரும்போது எதிர்ப்புக் கட்டுவது தான் வழமை யான எதிர்ப்பின் அடை யாளம். நாங்கள் எதிர்ப்பு காட்டினோம் என்பதை வெளி உலகத்துக்குத் தெரிவிக்கவே அவர்கள் கறுப்புக் கொடி ஏந்தி ஆர்ப்பட்டம் நடத்தினர் எனக் கருதலாம்.

காணாமல் போனவர் கள் உயிருடன் இல்லை என்ற உண்மையை பிரதமர் மறைமுகமாக வெளிப்படுத்தி உள்ளார். அவர்களுக்கு என்ன நடந்தது. அவர்களின் உயிர் எப்படி யாரால் பறிக்கப்பட்டது, யார் கட்டளையிட்டது போன்றவற்றையும் வெளிப்படுத்த பிரதமர் நடவடிக்கை எடுப்பாரா யின் பல பிரச்சினை களுக்கு தீர்வு காணலாம்.

தமிழ் மக்கள் மீது இதுவரை காலமும் திணிக்கப்பட்ட கொடு மைகளுக்கு இலங்கை அரசாங்கம் இதுவரை வருத்தம் தெரிவிக்க வில்லை. அவைபற்றி நேர்மையுடன் கூறும் துணிவு தானும் சிங்களத் தலைவர்களுக்கு இல்லை. தமிழர்கள் கொடுமைப்படுத்தப் படுகிறார்கள் எனக் கூறும் சிங்களவர்கள் துரோகிகளாகவே பார்க்கப்படுகிறார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் யாழ்ப்பணத்தில் ஊன்றிக் கால் பதிக்க தருணம் பார்த்துக்கொண்டிருக்கின் றன. தேசியப் பொங்கல் போன்ற விழாக்கள் அதற்கு எடுகோளாகித் துணைபோகின்றன அவ்வளவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொங்கல் விருந்து 'ரஜினி முருகன்'

**விஜய்**, அஜித்திற்கு பிறகு உண்மையாகவே விநியோகஸ்தரின் செல்லப்பிள்ளையாக இருப்பவர் சிவகார்த்திகேயன். காக்கிசட்டை வெற்றிக்கு பிறகு பல தேதிகள் மாற்றி எப்படியோ ரஜினி முருகன் திரைக்கு வந்து விட்டது.

'வருத்தப்படாத வாலிபர் சங்க' கூட்டணி பொன்ராம், சிவகார்த்திகேயன், சூரி, டி.இமான் மீண்டும் இணைய இந்தப்படத்திற்கு பூஜை போட்ட அன்றே எதிர்பார்ப்பு எகிறிவிட்டது. இதைத் தொடர்ந்து ஒரு வழியாக பொங்கல் திருநாளில் மேலும் திருவிழா கோலம் ஆக்க, ரஜினி முருகன் உலகம் முழுவதும் 800 திரைய ரங்குகளில் வெளிவந்தது.

'வருத்தப்படாத வாலிபர் சங்கம்' ஸ்டைலில் சிவகார்த்திகேயன்+சூரி கூட்டணி வேலைக்கே போகாமல் கலாட்டா செய்து வருகின்றனர் ஊருக்குள். ஒரு கட்டத்தில் கீர்த்தி சுரேஷை சிவகார்த்திகேயன் யதார்த்தமாக பார்க்க வழக்கம் போல் பார்த்தவுடன் காதல்.

ஆனால் கீர்த்தி சுரேஷ் அப்பாவிற்கு சிவகார்த்திகேயனை பார்த்தாலே பிடிக்கவில்லை. ஏனென்றால் சிவகார்த்திகேயன் அப்பாவும் கீர்த்தி சுரேஷ் அப்பாவும் இளம் வயதில் நண்பர்களாக இருந்து ஒரு சண்டையால் பிரிந்தவர்கள்.

பின் கீர்த்தியை காதலிக்க அவர் வீட்டு முன்பே டீக்கடை போடுகிறார் சிவகார்த்திகேயன்.

கீர்த்தி அப்பாவின் பேச்சை கேட்டு சிவகார்த்திகேயனை காதலிக்க மறுக்கிறார். பிறகு டீக்கடையை காலி செய்து ரியல் எஸ்டேட்டில் நல்ல பணம் வரும் என்று தன் தாத்தா ராஜ்கிரணிடம் பணம் வாங்கி ரியல் எஸ்டேட் ஆரம்பிக்க, அதே ஊரில் பணக்காரர்களை 'குறிவைத்து' செய்து பணம் பிடுங்கும் சமுத்திரகனி சிவகார்த்திகேயனிடம் பணம் கேட்டு மிரட்ட, சிவகார்த்திகேயன் அதை கொடுக்க மறுக்கிறார்.

இதன் பின் ஒரு சில இடங்களில் இவர்களுக்குள் மோதல் ஏற்பட சமுத்திரகனி, சிவகார்த்திகேயன் குடும்பத்தையே அழிக்க முயற்சி செய்ய, அதை சிவா எப்படி தடுக்கிறார் என்பதை கலகலப்பாக கூறியிருக்கிறார் பொன்ராம்.

சிவகார்த்திகேயன் மான் கராத்தே, காக்கிசட்டையில் அதிரடியில் கலக்கியிருந்தாலும், தன்னுடைய விருப்பத்துக்குரிய குடும்ப ரசிகர்களை கொஞ்சம் ஏமாற்றினார். ஆனால், இதை யெல்லாம் சேர்த்து வைத்தால் போல் ரஜினி முருகனில் நகைச்சுவை, 'செண்டிமெண்ட்', ஆடல், பாடல் என அதகளம் செய்துள்ளார். கொஞ்சம் 'கிட்டி'ல் இளைய தளபதி போலவே தெரிகின்றது.

நடித்த ஒரு படம் தான் வந்துள்ளது, ஆனால், அடுத்தடுத்து கையில் அரை 'டசின்' படங்களை வைத்திருக்கும் கீர்த்தி சுரேஷிற்கு இப்படம் தான் தமிழ் சினிமாவின் பிள்ளையார் சுழி என்று கூட சொல்லலாம். சிவகார்த்திகேயனுக்கு கவுண்டர் கொடுப்பது, பாடல் காட்சியில் குட்டி குட்டி எக்ஸ்பிரஷன் என ரசிகர்களை கவர்ந்து இழுக்கின்றார். தமிழ் சினிமாவிற்கு இன்னும் 10 வருடம் ஆள ஒரு தரமான கதாநாயகி கிடைத்து விட்டார்.

சூரி நீண்ட இடைவேளைக்குப் பிறகு தன் விருப்பத்துக்குரிய கூட்டணியுடன் இணைந்துள்ளார். சிவாக்கு போட்டியாக கவுண்டர் கொடுத்து கலகலப்பாக்குகிறார். அதிலும் சிவா காதலுக்கு பாடல் போடுவது, அதற்காக கீர்த்தியின் அப்பாவிடம் அடிவாங்கும் இடம் தான் கலகலப்பின் உச்சக்கட்டம், தீவிர ரஜினி ரசிகராக கீர்த்தியின் அப்பா, மேனரிசம், ரஜினி பாணியில் மகளுக்கு அட்வைஸ் செய்வது என அட்டகாசம் செய்கிறார்,

ராஜ்கிரண் இனி தான் அவர் நல்ல நடிகர் என்று நாம் சொல்லித் தெரிய வேண்டியது இல்லை. சிவகார்த்திகேயனுக்கு தாத்தாவாக எப்போதும் போல் 'ஸ்கோர்' செய்கிறார். அதிலும் இறந்தது போல் நடிக்கும் இடத்தில் சிரிக்க வைத்து, வெளிநாட்டில் இருக்கும் தன் பிள்ளைகளை பார்த்து என் தலைமுறைக்கு தமிழே கற்றுக் கொடுக்கல, நீங்க என்னைய பற்றிய சொல்லியிருப்பீங்கன்னு செண்டிமெண்டிலும் ராஜ்கிரண் இன்றைய தலைமுறை நடிகர்களுக்கு செம்ம போட்டி தான்.

சமுத்திரகனி கதாபாத்திரத்தில் தான் ஒரு அழுத்தமே இல்லை, இதன் பின் ஒரு சில இடங்களில் இவர்களுக்குள் மோதல் ஏற்பட சிவகார்த்திகேயன் தன் வீட்டை விற்க முயற்சி செய்ய அந்த வீட்டில் எனக்கும் பங்கு இருக்கு என்று சமுத்திரகனி வந்து நிற்கிறார். அந்த வீட்டை விற்றால் தான் சிவகார்த்திகேயன் வாழ்க்கையில் செட்டில் ஆகமுடியும். அந்த வீட்டை சிவகார்த்திகேயன் விற்றாரா, சமுத்திரகனியின் சதி செயலை முறியடித்தாரா என்று கலகலப்பாக கூறியிருக்கிறார் பொன்ராம்,

டி.இமான் இசையில் என் னம்மா இப்படி பண்றீங்களேமா. உன் மேல கண்ணு பாடல்கள் ரசிக்க வைக்க, பின்னணி இசையில் மதுரைக்கே ஏற்ற போக்கில் கலக்கியுள்ளார்.

சிவகார்த்திகேயன் 'டைமிங் காமெடி' 'செண்டிமெண்ட்' சின்ன ஆக்ஷன் என முழு ஹீரோவாகிவிட்டார். நீண்ட இடைவேளைக்கு பிறகு சூரி காமெடி நன்றாக இருக்கிறது. அதிலும் குறிப்பாக பஞ்சாயத்து காட்சி 'காமெடி' கலக்கல்.

இரண்டரை மணி நேரம் படம் என்றாலும் எந்த காட்சியும் போர் அடிக்காமல் திரைக்கதை அமைத்திருக்கிறார் பொன்ராம். அதிலும் பொங்கலுக்கு ஏற்ற விருந்தாக வந்துள்ளது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தென் சீனக் கடலில் அத்துமீறும் சீனா


**- வேல்தர்மா**

**2016** ஜனவரி 4ஆம் திகதி தென் சீனக் கடலில் தனது இறைமைப் பிராந்தியத் தினுள் அத்து மீறியதாக வியட்னாம் குற்றம் சாட்டியுள்ளது. Spratly தீவுக் கூட்டத்தில் உள்ள Fiery Cross என்னும் பவளப் பாறையை மேடுறுத்தி சீனா உருவாக்கிய செயற்கைத் தீவில் சீனாவின் போர் விமானம் தரையிறங்கியதையே வியட்னாம் தனது இறைமைக்குள் சீனா அத்து மீறியதாகச் சொல்கின்றது. வியட்னாம் வெளியுறவுத் துறை பேச்சாளர் லீ ஹை பின் Fiery Crossஇல் விமான ஓடுபாதை சட்ட விரோதமாக நிர்மாணிக்கப் பட்டதாகத் தெரிவித்தார்.

சீன வெளியுறவுத் துறை அமைச்சர் சீனாவின் இறையாண்மைக்குள் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தீவுக்குள்தான் தமது விமானம் பரீட்சார்த்தமாக தரையிறக்கப் பட்டதாகத் தெரிவித்தார் என சீனச் செய்தி நிறுவனமான ஜின்ஹுவா அறிவித்துள்ளது. தென் சீனக் கடலில் பிலிப்பைன்ஸ், வியட்னாம், மலேசியா, புரூனே போன்ற நாடுகள் தமது கடல் எல்லைகள் தொடர்பாக சீனாவுடன் முரண்படுகின்றன.

சீனா தென் சீனக் கடலில் உருவாக்கும் தீவுகளை செய்மதிகள் மூலம் எடுத்த படங்களில் இருந்து அங்கு விமான எதிர்ப்பு ஏவுகணைகள், சிறப்புப் படைகளுக்கு எதிரான நடவடிக்கை நிலையங்கள், ரடார் எனப்படும் கதுவிக் கோபுரங்கள், எரிபொருள் நிரப்பு நிலையங்கள், பாரிய கப்பல்களுக்கான துறைமுகங்கள் உருவாக்கும் வாய்ப்புக்கள் இருப்பதாகக் கருதப் படுகின்றது.

தென் சீனக் கடலில் சீனாவின் நிலைப்பாட்டை அமெரிக்காவும் எதிர்க்கின்றது. சீனா பன்னாட்டுக் கடற்பரப்பில் சுதந்திரக் கடற்போக்குவரத்திற்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் தீவுகளைச் செயற்கையாக உருவாக்குவதாக அமெரிக்கா சொல்கின்றது. சீனாவின் தீவுகளுக்கு சவால் விடும் வகையில் அதன் மேலாகத் தனது போர் விமானங்களைப் பறக்க விட்டதுடன் தன் நாசகாரிக் கப்பலையும் அதற்கு அண்மையாகக் கொண்டு சென்றது. அமெரிக்க வெளியுறவுத் துறைச் செயலர்அஸ்டன் கார்ட்டர் ஒரு போர் உருவாகக் கூடிய அபாயம் தென் சீனக் கடலில் உள்ளது என்றார். அமெரிக்காவின் அணுவலுவில் இயங்கும் Nimitz வகையைச் சேர்ந்த பெரிய விமானம் தாங்கிக் கப்பலான USS Ronald Reagan, வழிகாட்டு ஏவுகணைகள் தாங்கி





நாசகாரிக் கப்பல்கள், குண்டு வீச்சு விமானங்கள் போன்றவை தென் சீனக் கடலிலும் கிழக்குச் சீனக் கடலிலும் சேவையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளன.

எரிபொருள் பெருமளவில் இருக்கின்றது என நம்பப்படும் தென் சீனக் கடலில் 2,740,000 சதுர மீற்றர் கடற்பரப்பை சீனா தனதாக்க முயல்கின்றது. ஆண்டு ஒன்றிற்கு நான்கு ரில்லியன் டொலர்கள் பெறுமதியான வர்த்தகம் தென் சீனக் கடலின் ஊடாக நடக்கின்றது. சீனா Fiery Crossஇல் உருவாக்கிய செயற்கைத் தீவு 3,000 மீற்றர் அல்லது இரண்டு மைல் நீளமானது. இதில் பெரிய போர் விமானம் தரையிறங்க முடியும். இதனால் இந்தச் செயற்கைத் தீவு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தததாக உள்ளது.

தென் சீனக் கடலின் முக்கியத்துவத்திற்கு இரு பெரும் காரணங்கள் உள்ளன. முதலாவது கடற்போக்குவரத்து முக்கியத்துவம். இரண்டாவது எரிபொருள் மற்றும் கனிம வள இருப்பு. உலகக்கடற்போக்குவரத்தில் 30 விழுக்காடு தென் சீனக் கடலினூடாகச் செல்கின்றது. தென் சீனக்கடலில் 213 பில்லியன் பீப்பாய் எண்ணெய் இருக்கலாம் என எதிர்பார்க்கப் படுகிறது. எரிவாயு 900 ரில்லியன் கன அடி இருக்கலாம் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் பல பில்லியன் டொலர்கள் பெறுமதியான கனிம வளங்களும் கடலுணவு வளங்களும் உண்டு. 1974இலும் 1988 இலும் சீனாவும் வியட்னாமும் ஸ்பிரட்லி தீவுகளுக்காக மோதிக் கொண்டன. பிலிப்பைன்ஸ் வியட்னாமுடனும் மலேசியாவுடனும் மோதக் கூடிய நிலைமைகளும் ஏற்பட்டிருந்தன.

சீனாவின் இரண்டாவது விமானம் தாங்கிக் கப்பல் உருவாக்கியதும், ஆபிரிக்காவில் ஒரு கடற்படைத் தளம் அமைத்ததும், ஆறு குண்டு வீச்சு விமானங்களை பசுபிக் பிராந்தியத்தில் பறக்க விட்டமையும் சீனா தனது பிராந்திய ஆதிக்கத்தில் அதிக கவனம் செலுத்துகின்றது என்பதை எடுத்துக் காட்டுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிம்மசொப்பனம் - 58



ஹவானாவில் வானொலிப் பெட்டிகள் அலறிக் கொண்டிருந்தன. மொன் கடாவைத் குறிவைத்த கலகக்காரர்கள் முறியடித்து விட்டோம். ஒருவர் மிச்சமில்லாமல் அனைவரும் சுட்டுக்கொல்லப்பட்டனர். தேசத்தைக் கவிழ்க்கவிருந்த மிகப்பெரிய சதி முறியடிக்கப்பட்டு விட்டது. அறிவிப்புக்கள் தொடர்ந்து ஒலி பரப்பாகிக் கொண்டிருந்தன. நம் எதிரிகளிடமிருந்து அதிநவீன ஆயுதங்களைக் கைப்பற்றியிருக்கிறோம். நம் இராணுவத்தை அழிக்க நினைத்த கலகக்காரர்கள் அழிக்கப்பட்டு விட்டனர்.

பாடிஸ்டா நெருக்கடி நிலையைப் பரகடனம் செய்தார். நான்கு நாள்களுக்கு முன்பு தான் பாடிஸ்டா விடுமுறை எடுத்துக் கொண்டு உல்லாசப் பயணம் சென்றிருந்தார். மொன்கடா நிலைவரம் கேள்விப்பட்டு விரைந்து வந்தார். வழக்கம் போல இந்தத் தாக்குதலையையும் தனது சொந்த லாபங்களுக்காகவே பாடிஸ்டா பயன்படுத்திக் கொண்டார். இதற்கு முன்பு ஆட்சியில் இருந்த பிரியோ தான் இந்தக் கூலிப் படையை ஏவி விட்டான். க்யூபாவின் அமைதி யைக் குலைக்கவே இந்த ஏற்பாடு. ஆனால் நாங்கள் அதை முறியடி த்து விட்டோம். மக்க்ள் கவலையின்றி வாழலாம் என்று அறிவித்தான்.

சர்வ வல்லமை கொண்ட அமெரிக்கா பாடிஸ்டாவின் இந்தக் கூற்றை அப்படியே நம்பி ஏற்றுக் கொண்டது. பார்த்தீர் களா நாம் வைத்த ஆள் எவ்வளவு புத்திசாலித்தனமாக எதிரிகளை ஒழித்து விட்டான் என்று பீற்றிக் கொண்டது. பாடிஸ்டாவுக்கு எதிர்ப்பு உருவாகியுள்ளது எனும் உண்மை யை யாரும் அமெரிக்காவுக்குத் தெரிவிக்க வில்லை. இத்தனைக்கும் அமெரிககாவின் ஆஸ்தான தூதுவர் ஒருவர் கியூபாவிலேயே வசித்து வந்தார். அவரும் கூட தன்னுடைய அறிக்கையில் ஏதோ தெருச்சண்டைக்கு நிகரான ஒரு சம்பவம் நடந்திருப்பதாகத் தான் தெரிவித்தார். அமெரிக்கா இதைப் பொருட்படுத்தவேயில்லை. குறிப்பாக, காஸ்ட்ரோவைப் பற்றிய குறைந்த பட்ச சந்தேகத்தைக் கூட அமெரிக்கா கொண்டிருக்கவில்லை. கிரான்பிட்ரா எனும் மலை உச்சியை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தார் காஸ்ட்ரோ. இந்த முறை அவருடன் மலையேறியவர்கள் 18பேர் மட்டுமே.19 வயது இளைஞரான எமிலியோ தானும் வருவதாகச் சொல்லி யிருந்தான். ஆனால் அவனால் தொடர்ந்து மலையேற முடியவில்லை. அவன் அணிந்திருந்த செருப்பு அவன் காலைப் பதம் பார்த்தது தான் கால்வலிக்கு காரணம். என்னென்னவோ செய்தும் அவனது கால்வலி கட்டுப்படவில்லை. வேறு வழியின்றி காஸ்ட்ரோவிடம் விடைபெற்றுக் கொண்டு கீழே இறங்கத் தொடங்கினான். ஆனால், அதற்குள் இராணுவத்தினர் அவனைக் கைது செய்தனர். சிறிதும் யோசிக்காமல் சுட்டுக்கொன்றனர்.


மலையேறுவதால் ஏற்பட்ட களைப்பைத் தவிர வேறு எந்தக் களைப்பும் இல்லை காஸ்ட்ரோவிடம். ஆனால், நெஞ்சம் நிறைய தகிக்கும் நெருப்பு. திட்டம் தோல்வியடைந்தது என்பதால் மட்டுமல்ல, அத்தனை முக்கியமான தோழர்களையும் அநியாயமாக இழந்ததால்.நீண்ட நேர அலைச்சலுக்குப் பிறகு ஒரு விவசாயியைக் கண்டார்.காஸ்டோவின் குழுவுக்கு உணவளிக்க அந்த விவசாயி ஒப்புக்கொண்டார். அனைவரும் அவரது குடிசைக்குச் சென்று சாப்பிட்டனர். காஸ்ட்ரோவுக்கு மகா திருப்தி. உடனடியாக ஒரு கைத்துப்பாக்கியை அந்த முதியவருக்கு அன்பளிப்பாக அளித்தார். கூடவே அறிவுரை வேறு. உங்கள் பொருளைக் கொள்ளையடிக்க யாராவது வந்தால் தயங்காமல் சுட்டுவிடுங்கள்.

பாடிஸ்டா அரசு மிருகத்தனமாக நடந்து கொண்டது. ஜீலை 26 தாக்குதல் வடுவை அவர் மறக்கவில்லை. காஸ்ட்ரோவின் ஆள்களைத் தேடிப்பிடித்து அழித்து விடுமாறு ஆணை பிறப்பித்தார்.

தாக்குதல் நடைபெற்ற இரண்டாவது நாள், சாண்டியா கோவில் பெரஸ் சாண்டஸ் எனும் பிஷப் தலைமையில் கூட்டம் கூட்டப்பட்டது. இராணுவத்தினர் தாம் பிடித்து வைத்துள்ள கைதிகளை சித்திரவதை செய்யக்கூடாது, அவர்கள் உயிருக்கு எந்தவித ஆபத்தும் நேரக்கூடாது என்று இந்த அமைப்பு போராடத் தொடங்கியது. போராட்டம் பெரிய அளவில் வெடிப்பதைக் கண்ட பாடிஸ்டா ❍ பெரஸ்ஸுடன் ஓர் உடன்படிக்கையை செய்து கொண்டது. ஆயிரம் அக்கிரமங்களை பயமின்றிச் செய்தாலும் திருச்சபையை விரோதித்துக் கொள்ள பாடிஸ்டா தயக்கம் காட்டினார். பாடிஸ்டா மட்டுமல்ல ராணுவமும் கூட திருச்சபையை எதிர்க்க முன்வரவில்லை.

காஸ்ட்ரோவையும் அவரது கூட்டாளிகளையும் உயிருடன் பிடித்து வந்து தருகின்றேன், அவரைக் கொல்ல வேண்டாம் என்றார் பெரஸ். பாடிஸ்டாவிடம் மாட்டினால் காஸ்ட்ரோவைச் சாகடித்து விடுவார்கள் என்று அவருக்குத் தெரியும். புரட்சியாளர்களே திரும்பி வாருங்கள் எனும் பெயரில் ஓர் அறிக்கையை தயார் செய்து அனைத்துப் பகுதிகளுக்கும் அனுப்பி வைத்தார்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 708



### மேலிருந்து கீழ்

1.நைவேத்தியம் செய்தது.
2.மகளீர்.
3.வறுமைத்தன்மை.
4.பூச்சாகப் படிவது.
5.தூர அளவீடு.
7.பண்பற்ற தன்மை.
9.பர்வதம்.
10.வலிமை.
13.ஒட்டி வளர்வது.
14.தலையில் முடிவது.
15.பாணம்.
16.நலம்.
17.கிணற்றில் நீர் அள்ளுவதற்கு உதவுவது.
18.ஏது.
19.நட்பு அல்ல.

### இடமிருந்து வலம்

1. வெகுசிறப்பு என்பதைக் குறிக்கும் சொல்.
4.ஒரு வகைத் தானியம்.
6. நிறுத்து.
7.கெண்டை மீன்.
8.வல்லமை.
11.சிரசு.
12.திறன் மிக்க தன்மை.
14.தொண்டையில் இருந்து எழுவது.
15.இருபால் இணைவில் உருவாவது.
16.தீயைத் தொட்டால்.....
17.மனைவி.
18.வேள்வி.
19.முக்கனிகளுள் ஒன்று.
20.யானைக்கு மட்டும் உண்டு.
21.ஒட்டுவது இதனால்.

அனுப்புபவர் பெயர்:.............................................
விலாசம்:.............................................
.............................................
கையொப்பம்:.............................................

### சொற்சிலம்பம் போட்டி இல. 708

சொற்சிலம்பம் போட்டி 708ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி 03ஆம் திகதி ஆகும். விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே 2016 பெப்ரவரி 10 மற்றும் பெப்ரவரி 17 ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும். முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## போட்டி இல. 705இல் பரிசு பெற்றோர்

| | |
|---|---|
| 1 ஆம் பரிசு | **க.கமலேஸ்வரன்,** இல -791,கட்சன் வீதி, வட்டக்கட்சி, கிளிநொச்சி. |
| 2 ஆம் பரிசு | **அ.ஶ்ரீஸ்கந்தராஜா,** இல- 15/11 புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூர் கிழக்கு, யாழ்ப்பாணம். |
| 3 ஆம் பரிசு | **வே. சுபிதா ,** புளியம்பொக்கணை, பரந்தன். |

பரிசுக்குரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் அலுவலக நேரத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தி யாழ். உதயன் அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தொடர்புகளுக்கு 021 492 7419 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### சொற்சிலம்பம் போட்டி இல. 706க்கான விடைகள்

| மேலிருந்து கீழ் | இடமிருந்து வலம் |
|---|---|
| 1.பாயாசம். | 1.பாரதம். |
| 2.ரகம். | 2.ரதம். |
| 3.தம்பதி. | 7.பாகம். |
| 4. சம. | 8.குமரன். |
| 5. கரகம். | 9.சம்பவம். |
| 6. தின். | 11.திரு. |
| 8.கும். | 12.தாம்பு. |
| 10.வருமானம். | 15.மாதம். |
| 12.தாம். | 17.அடிமனம். |
| 13.புத்திரன். | 19.நதி. |
| 14.படிவம். | 20.சவரம். |
| 16.தம். | 21.அகர. |
| 17.அசதி. | 22.திம்பு. |
| 18.கும். | 23.விதுரன். |
| 19.நகர. | |
| 21.அது. | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேதாஜியின் இறப்புக்கு விமான விபத்தே காரணம்



**தா**ய்வானில் நிகழ்ந்த விமான விபத்தில்தான் சுதந்திரப் போராட்ட வீரர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் உயிரிழந்தார் என சாட்சிகளின் ஆதாரத்துடன் பிரிட்டனைச் சேர்ந்த இணையதளம் தெரிவித்துள்ளது.

கடந்த 1945ஆம் ஆண்டு தாய்வானில் நிகழ்ந்த விமான விபத்தில் நேதாஜி பலியானதாகக் கூறப்பட்டது. ஆனால் இதை ஒரு தரப்பினர் நம்பவில்லை. இதில் மர்மம் இருப்பதாகக் கூறி வருகின்றனர்.

இந்த நிலையில், மரணம் தொடர்பான உண்மையை வெளிக்கொண்டு வருவதற்காக அமைக்கப்பட்ட www.bosefiles.info என்ற இணையதளம் நேதாஜி மரணம் தொடர்பான தகவல்களை சாட்சிகள் ஆதாரங்களுடன் வெளியிட்டு வருகிறது. அதன் விவரம்:

கடந்த 1945-ம் ஆண்டு ஆகஸ்ட் 18ஆம் திகதி தாய்வான் தலைநகர் தைபேயின் புறநகர் பகுதியில் உள்ள ஒரு விமான நிலையத்தில் நிகழ்ந்த விமான விபத்தில் நேதாஜி உயிரிழந்தது உறுதி என ஆவணங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

நேதாஜியின் செயலாளர், 2 ஜப்பான் மருத்தவர்கள், ஒரு மொழிபெயர்ப்பாளர் மற்றும் தைவானைச் சேர்ந்த மருத்துவத்தாதி ஆகிய 5 சாட்சிகள்தான் இந்தத் தகவலை உறுதி செய்துள்ளனர்.

குறிப்பாக, விபத்து நடந்தபோது நேதாஜியுடன் பயணம் செய்து உயிர் தப்பிய அவரது செயலாளர் கேர்ணல் ஹபிபுர் ரஹ்மான கான், கடந்த 1945ஆம் ஆண்டு ஒகஸ்ட் 24ஆம் தேதி நேதாஜியின் உடலை எரித்த பின்னர் அவர் எழுதி கடிதம் தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

கேர்ணல் ஹபீபூர் ரஹ்மான்கான், இந்திய தேசிய இராணுவம், தைஹோகுவில் நடந்த விமான விபத்து தொடர்பாக எழுதிக் கொள்வது, “கடந்த 16-8-1945ஆம் ஆண்டு காலை 10.30 மணியளவில் ஜப்பானை நோக்கி எங்கள் பயணம் தொடங்கியது.

சுபாஷ் சந்திர போஸ், சில அரசாங்க உத்தியோகஸ்தர்கள், இவர்களுடன் நானும்-அந்த குழுவில் இருந்தேன். முதல் கட்டமாக சிங்கப்பூரில் இருந்து பாங்ஹொங் நோக்கி ஜப்பானிய ‘பம்பர்’ விமானத்தில் பயணித்தோம்.

**விமானத்தில் பற்றி எரிந்த தீக்கிடையே நாங்கள் வெளியேறினோம். முதலில் நான் வெளியே வந்தேன். எனக்கு பின்னால் நேதாஜி வந்தார்.**

**விமானத்தை விட்டு வெளியே வந்த நான் திரும்பி பார்த்த போது, நேதாஜியின் உடல் முழுவதும் தீ பற்றி எரிந்ததைப் பார்த்தேன். நான் அவரது உதவிக்கு ஓடினேன். அவரது உடைகளை கழற்றினேன்.**

**ஆனால் அவருக்கு உடல் முழுவதும் பலத்த தீக்காயங்கள் ஏற்பட்டிருந்தன. விமானம் கீழே விழுந்ததில் நேதாஜிக்கு தலையிலும் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது.**

**விமானம் தரையில் விழுந்த நேரத்தில் பெற்றோல் தாங்கி வெடித்து அதில் இருந்த பெற்றோல் நேதாஜி மீது சிதறியிருக்கலாம் என்பது என் கணிப்பு.**

மதியம் 3.30 மணியளவில் பாங்ஹொங் சென்றடைந்தோம். பின்னர் 17ஆம் திகதி காலை 7.30 மணியளவில் பாங்ஹொங்கில் எங்களுக்காக இரு ஜப்பான் விமானங்கள் காத்திருந்தன.

ஒன்று இந்தியர்களுக்கு. நேதாஜி,ஸ்ரீ ஐயர், கேர்ணல் கேலோனல் குல்ஷார் சிங், கேர்ணல் தீப்நாத் தாஸ், லெப்டினன்ட் கேர்ணல் பிரீதம் சிங், மேஜர் ஏ.ஹசன் மற்றும் நான் உள்ளடக்கிய 7 பேருக்கும் ஒரு விமானம்.

இந்திய சுதேசிய அரசுடன் இராணுவ நிர்வாகங்களை கவனிக்கும் ஜப்பானிய லெப்டினன்ட் ஜெனரல் இசோடா, சுதேசிய அரசுடன் அரசியல் விவகாரங்களுக்கான ஜப்பான் அமைச்சர் ஹெச். ஈ. ஹாட்சியா, ஆகியோர் மற்றொரு விமானத்தில் பயணித்தனர்.

அதே தினத்தில் காலை 10.45 மணிக்கு வியட்நாமில் உள்ள சைகூன் (தற்போது ஹோசிமின் ) போய் சேர்ந்தோம். அன்று மாலை லெப்டினன்ட் ஜெனரல் இசோடா, ஹாட்சியா, கேர்ணல் தாடா, நேதாஜிக்கு ஒரு தகவல் அளித்தனர். அதாவது ஜப்பான் புறப்படும் விமானத்தில் இரு இருக்கைகள் எஞ்சியிருக்கின்றன.

ஜப்பானுக்கு புறப்படத் தயாராகுங்கள் என்று கூறப்பட்டது. விமானத்தில் இருக்கைகள் இல்லாத நிலையில் எங்களுடன் வந்த சுதேசிய இராணுவ அதிகாரிகள் அங்கேயே தங்கி விட்டனர்.

நேதாஜி என்னை மட்டும் உடன் அழைத்துக் கொண்டார். சைகூனில் இருந்து மாலை5.15 மணியளவில் அந்த இரட்டை என்ஜின் கொண்ட மிட்சுபிசி கே.ஐ- 21 ரக ஜப்பானிய பம்பர் விமானம் புறப்பட்டது.

இரவு 7.45 மணிக்கு பிரெஞ்சு படைகளின் கட்டுப்பாட்டில் இருந்த தரோன் நகரில் (வியட்நாமில் உள்ள டா நாங் என்ற கடற்கரை நகரம் ) விமானம் தரை இறங்கியது.

அன்றைய இரவு அங்கேயே கழித்தோம். அடுத்த நாள் காலை அதாவது 1945ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18ஆம் திகதி காலை எங்கள் விமானம், தாய்வானில் உள்ள தைஹோகூ (தற்போது தைபே) நோக்கி பயணத்தை தொடங்கியது.

மதியம் 2 மணிக்கு அங்கு சென்றடைந்தோம். சுமார் 35 நிமிடங்கள் ஓய்வெடுத்தோம்.

தொடர்ந்து 2.35 மணிக்கு ஜப்பானை நோக்கி விமானம் புறப்படத் தொடங்கியது.

தைஹோகூ ஏரோ டிரோம் விட்டு விமானம் மேலெழும்பத் தொடங்கிய சில நிமிடங்களிலேயே விமானத்தின் முன் பகுதியில் இருந்து குண்டு வெடித்தது போல பெரும் சத்தம் கேட்டது.

விமான என்ஜினில் உள்ள இறக்கை ஒன்று உடைந்து தொங்கியதால் ஏற்பட்ட சத்தம் அது. அடுத்த நிமிடமே தரையை நோக்கி விமானம் பாய்ந்தது. விமானம் தரையில் மோதியவுடன் முன்பக்கமும் பின்புறமும் தீ பற்றத் தொடங்கியது.

விமானத்தில் நேதாஜி பெற்றோல் தாங்கி அருகில் இருந்தார். நான் அவருக்கு அருகில் இருந்தேன்.

விமானத்தில் பற்றி எரிந்த தீக்கிடையே நாங்கள் வெளியேறினோம். முதலில் நான் வெளியே வந்தேன். எனக்கு பின்னால் நேதாஜி வந்தார்.

விமானத்தை விட்டு வெளியே வந்த நான் திரும்பி பார்த்த போது, நேதாஜியின் உடல் முழுவதும் தீ பற்றி எரிந்ததைப் பார்த்தேன். நான் அவரது உதவிக்கு ஓடினேன். அவரது உடைகளை கழற்றினேன்.

ஆனால் அவருக்கு உடல் முழுவதும் பலத்த தீக்காயங்கள் ஏற்பட்டிருந்தது. விமானம் கீழே விழுந்ததில் நேதாஜிக்கு தலையிலும் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது.

விமானம் தரையில் விழுந்த நேரத்தில் பெற்றோல் தாங்கி வெடித்து அதில் இருந்த பெற்றோல் நேதாஜி மீது சிதறியிருக்கலாம் என்பது என் கணிப்பு.

இதனால்தான் அவர் மீது தீ இலகுவாக பரவியிருக்கலாம் என்று கருதுகிறேன். எனினும் அருகில் இருந்த ஜப்பானிய மருத்துவமனைக்கு 15 நிமிடத்துக்குள் நேதாஜியை கொண்டு போய் விட்டோம்.

எனக்கும் உடல் எங்கும் தீக்காயங்கள், தலையில் பலத்த அடி பட்டிருந்தது. நேதாஜியைக் காப்பாற்ற எவ்வளவோ முயற்சித்தோம். மருத்துவர்கள் தீவிரமாக போராடி பார்த்தனர்.

ஆனால் அன்று இரவு 9 மணியளவில் நேதாஜி மரணம் அடைந்து விட்டார். நேதாஜி இறப்பதற்கு முன்னால் மிகுந்த அமைதியுடன்

( 22 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் ஒரு பாடல்?

பீ ப்பாடல் சர்ச்சை இன்னும் ஓயவில்லை. சிம்பு மீது வழக்குகள் நடந்து வரும் நிலையில் அனிருத் தனக்கும் பீப்பாடலுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை எனக் கூறியுள்ளார்.

இந்த நிலையில் சிம்பு, அனிருத் கூட்டணி தெலுங்குப் படமொன்றில் பாடவிருக்கிறது. மங்காத்தா நடிகர் மகத் ராகவேந்திரா, மற்றும் செட்னா நடிப்பில் உருவாகி வரும் 'ஷி' படத்தில் தான் இவர்கள் இருவரும் இரு பாடல்கள் உருவாக்க உள்ளனர்.

பாம்பே போல் இசையமைக்கும் இந்தப் படத்தை இயக்குகிறார் பர்சா மகேந்தர்.மகத் செட்னா தவிர்த்து ஸ்வேதாமேனன், சேனியா அகர்வால் உள்ளிட்டோர் முக்கிய பாத்திரங்களில் நடிக்கிறார்கள்.

இதற்கு முந்தைய படங்களில் இவர்கள், பாடி இசையமைத்தது சாதாரண விஷயம் என்றாலும் பீப் சர்ச்சைக்குப் பிறகு ஒரே படத்தில் இவர்கள் மீண்டும் இணையவுள்ளனர் என்பது ஆச்சரியப்படத்தக்கது.



# சர்வதேச படவிழா நிறைவு

செ ன்னையில் நடைபெற்ற 15-ஆவது சர்வதேச திரைப்பட விழாவில் சிறந்ததிரைப்படமாக ''கிருமி' தேர்வு செய்யப் பட்டது. சிறந்த நடிகைக்கான விருதை நடிகை நயன்தாரா பெற்றார். உலக சினிமாக்களை தமிழ் ரசிகர்களுக்கு அறிமுகப் படுத்துவ தோடு, தமிழில் கடந்த 12ஆண்டுகளாக நடைபெற்ற இந்த விழா, 13-ஆம் ஆண்டாக கடந்த 6-ஆம் தேதி சென்னையில் தொடங்கியது. கடந்த ஒரு வார காலமாக நடைபெற்று வந்த இந்த விழா புதன்கிழமை நிறைவடைந்தது.




வ ரையறை இல்லாத சம்பளம், அழகு அள்ளும் கவர்ச்சி என எந்த எல்லைக்கும் தயாராக இருப்பார் எமிஜாக்சன். பிரச்சினை இல்லாத நடிகர் என்பது தான் அவரது விம்பம்.

இருந்தும் அவர் கொஞ்சம் சிக்கலானவர் என்கிறார்கள் அவர் நடிக்கும் படக்குழுவினர். இடைவெளி கிடைக்கும் நேரங்களில் எல்லாம் அவர் லண்டனுக்குப் பறந்து விடுவார்.எல்லா வித ஆயத்தங்களையும் செய்து வி காத்திருக்கும் படக்குழுவுக்கு "விமானத்தை தவற விட்டுள்ளேன் பிறகு வருகிறேன்" என்று பதில் க தயாரிப்பையும், இயக்குநரையும் கொதிப்படையச் செய்கிறாராம் எமிஜாக்சன்.



# எமிஜாக்சன் இப்படியானவரா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ச்சியில் ரசிகர்கள்

தமிழ், தெலுங்கு தாண்டி தற்போது காஜல் திரையுலகத்தில் களம் இறங்கிவிட்டார். இவர் நேற்று திரைப்பட விருது விழாவில் கலந்துக்கொண்டார். இதில் இவர் மிகவும் கவர்ச்சியான உடையில் வந்தார். திரையுலக பிரபலங்கள் கூட இப்படி வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதை கண்ட தென்னிந்தியா ரசிகர்கள் பலரும் அதிர்ச்சியடைந்தனர். மேலும் அந்த புகைப்படம் தான் தற்போது சமூக வலைத்தளத்தில் வைரலாக பரவி வருகின்றது.





# கீர்த்தி சுரேஷ் நீக்கம்

இது என்ன மாயம், ரஜினிமுருகன் படத்தின் மூலம் ரசிகர்களை கவர்ந்தவர் கீர்த்தி சுரேஷ். தற்போது இவர் ரயில், சிவகார்த்திகேயனின் புதிய படம், பாம்புசட்டை என பல படங்களில் நடித்து வருகிறார். மேலும், ஜீவா நடிக்கும் கவலை வேண்டாம் படத்திலும் ஹீரோயினாக நடிக்க ஒப்பந்தம் செய்திருந்தார். இதற்கான புகைப்படப்பட கூட சமீபத்தில் நடந்து முடிந்தது. ஆனால், தற்போது என்ன ஆனது என்று தெரியவில்லை, இப்படத்திலிருந்து கீர்த்தி சுரேஷ் நீக்கப்பட்டுள்ளார்.



# விஜய் ஜோடி யார்?

விஜய் முதன்முதலாக இரண்டு வேடங்களில் நடித்த படம் அழகிய தமிழ் மகன். அந்த படத்தை இயக்கியவர் பரதன். அவர்தான் அடுத்து விஜய்நடிக்கும் 60வது படத்தை இயக்குகிறார். இந்த புதிய படத்தில் விஜய் சிங்கிள் ரோலில்தான் நடிக்கிறார். இப்படம் ஜனரஞ்சகமான கதையில் உருவாகிறதாம். குடும்ப பின்னணியில் நடக்கும் கதை என்பதால், அப்படத்தில் நடிக்க ஹோம்லியான இரண்டு நடிகைகளை ஒப்பந்தம் செய்திருக்கிறரராம் பரதன்.அந்த வகையில், மலையாளத்தில் முன்னணி நடிகையாக இருக்கும் மியா ஜார்ஜ் அப்படத்தில் நடிப்பதாக கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரடைப்பே நலமா?

**டாக்டர் எஸ். அருள்ராஜ்,**
**தலைவர் மற்றும்**
**தீவிர சிகிச்சை நிபுணர்,**
**இந்தியா**

வித்தியாசமான தலைப்பாக இருக்கிறது என நினைக்கிறீர்களா? தலைப்பின் நோக்கம் என்னவென்றால் நமது வாழ்க்கை முறை மாற்றங்களினால் மாரடைப்பைத் தவிர்க்கலாம் அல்லது ஒத்திப் போடலாம். ஆரோக்கியமான வாழ்க்கை வாழலாம் என்பதே நோக்கமாகும். மாரடைப்பே நலமா என்று மக்கள் கேட்கும் நாள் வர வேண்டும்.



இன்றைய காலகட்டத்தில் பல்வேறு காரணங்களால் இளம் வயதினருக்குக்கூட மாரடைப்பு வருகிறது. 'ஜங் புட்' எனப்படும் 'பீஸா', வேர்கர் போன்ற உணவுகள், குறைந்த உடல் உழைப்பு, புகைப்பிடித்தல், அதிக அளவு மது அருந்துதல் ஆகியவற்றால் மாரடைப்பு ஒரு சாதாரணமான உயிர்க்கொல்லி நோயாகிவிட்டது.

தற்போது நாளுக்கு நாள் புதிய மருத்துவ முறைகள் வந்து கொண்டிருக்கின்றன. நெஞ்சுவலி அல்லது மாரடைப்பு ஏற்பட்ட பிறகு, நவீன 'எஞ்சியோ பிளாஸ்ட்டி' மற்றும் 'பைபாஸ்' இருதய அறுவை சிகிச்சை முறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன.

**அடைப்பின் அறிகுறி:**

நெஞ்சுவலி என்பது நடுநெஞ்சில் ஏற்படக்கூடிய ஒருவகை அழுத்தம் ஆகும். இது இதயத் தசைகளில் உள்ள ரத்த நாளங்களில் ஏற்பட்டுள்ள அடைப்பின் அறிகுறி ஆகும். நெஞ்சில் வலி ஏற்படும்போது, அதை மாரடைப்பு ஏற்படுவதற்கு உரிய முக்கிய அறிகுறியாகக் கருத வேண்டும். வாயுப் பிரச்சினை என அலட்சியமாக இருக்கக் கூடாது.

நெஞ்சுவலி மார்பின் நடுவில் அழுத்தம் போன்று வலி ஏற்படும். அங்கிருந்து தோள்பட்டை, கழுத்து, தாடை, இடது கை, வலது கை, முதுகுக்கு வலி பரவலாம். அதிக வலியின் போது வியர்வை, மூச்சுத்திணறல், மயக்கம் ஏற்படும்.

**அஸ்பிரின் உதவும்:**

நெஞ்சுவலி ஏற்பட்டால் நடந்து செல்லாமல் 'ஆட்டோ' அல்லது 'அம்புலன்ஸ்' மூலம் இசிஜி வசதியுள்ள மருத்துவரிடம் உயிர்காக்கும் பொன்னான முதல் ஒரு மணி நேரத்திற்குள் (Golden hour) உடனடியாக சென்று விட வேண்டும்.


அஸ்பிரின் மாத்திரை இருந்தால், வைத்திரியரின் ஆலோசனையின் பின்னர் மாத்திரையைப் பொடி செய்து, நீரில் கலந்து மாரடைப்பு ஏற்பட்டவரை குடிக்கச் செய்யலாம்.

**மாரடைப்பு என்றால் என்ன?**

இதயம் எப்போதும் துடித்துக் கொண்டிருக்க வேண்டும். அப்போதுதான் உயிர் இருக்கும். இதயத் தசை வேலை செய்ய குறிப்பிட்ட அளவு இரத்தம் தேவைப்படும். இதயத்தில் உள்ள மூன்று கரோனரி இரத்தக் குழாய்களின் வழியாக இதயத் தசைக்கு இரத்தம் செல்கிறது. கரோனரி இரத்தக் குழாய்களில் தடை ஏற்பட்டாலோ, சுருங்கிவிட்டாலோ இரத்த ஓட்டத்தின் அளவு குறைந்துவிடும். இரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்பட்டு இதயத்துக்கு இரத்தம் செல்வது தடைபடுவதால் மாரடைப்பு ஏற்படுகிறது.

**பொன்னான நேரம்:**

ஒருவருக்கு மாரடைப்பு ஏற்படும் நிலையில், முதல் ஒரு மணி நேரம் மிக முக்கியமான நேரமாகும். அதாவது மாரடைப்பு ஏற்பட்டவரின் உயிரைக் காக்க, மாரடைப்பு ஏற்பட்ட ஒரு மணி நேரத்துக்குள் 'த்ராம்போஸிஸ்' மருந்துகளை இரத்தக் குழாய்களுக்குள் செலுத்தி, இரத்த



உறைவைத் தடுத்து, இரத்த ஓட்டத்தைச் சீர்படுத்தி, இரத்தம் செல்வதற்கு ஏற்பட்டிருந்த தடையை நீக்குவது மிக முக்கியமானதாகும்.

- 'எஞ்சியோபிளாஸ்ட்டி' அல்லது 'ஸ்டென்ட்டு'கள் பொருத்தியும் தடையை நீக்கலாம்.

**இதய 'பை-பாஸ்' அறுவைச் சிகிச்சை:**

மருந்துகள், எஞ்சியோ பிளாஸ்ட்டி உள்ளிட்ட சிகிச்சைகள் மூலம் இதய கரோனரி ரத்தக் குழாய்களில் ஏற்பட்டிருந்த அடைப்பை நீக்க முடியாவிட்டால், அவசர இதய பை-பாஸ் அறுவைச் சிகிச்சை செய்து மாரடைப்பு ஏற்பட்ட நோயாளியின் உயிரைக் காப்பாற்ற வேண்டியிருக்கும்.

**இதய ரத்த நாளங்களில் அடைப்பை நீக்குவது எப்படி?**


'எஞ்சியோகிராம்' வசதியுள்ள மருத்துவமனையில் உடனடியாக 'எஞ்சியோகிராம்' பரிசோதனை செய்யப்படுகிறது. இன்றைய நிலையில் 'எஞ்சியோகிராம்' பரிசோதனையில் இரத்தக் குழாயின் தன்மை, அடைப்புகளின் அளவு ஆகியவற்றை 30 நிமிடங்களில் கண்டறிந்து விடலாம். அடைப்பின் தன்மை, அடைப்பு ஏற்பட்டிருக்கும் இடம், பாதித்த இரத்தக் குழாய் ஆகியவற்றுக்கு ஏற்ப, 'எஞ்சிபோபிளாஸ்ட்டி' செய்து அடைப்பை அகற்றி 'ஸ்டென்ட்' பொருத்தலாம். அடைப்பின் அளவு அதிகமாக இருந்தாலோ, ஒன்றுக்கும் மேற்பட்ட கரோனரி ரத்தக் குழாய்களில் அடைப்பு இருந்தாலோ மருத்துவரின் ஆலோசனைப்படி, அவசர 'பை-பாஸ்' அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும். ஏனெனில் அடைப்பை அகற்றினால்தான் நோயாளியைக் காப்பாற்ற முடியும்.

**இரத்தம் மிகவும் முக்கியம்:**

உடல் முழுவதற்கும் உயிரோடு இருப்பதற்கும் ரத்தம் அவசியம். அந்த ரத்தத்தை உடல் முழுவதுக்கும் விநியோகம் செய்யும் 'பம்ப்' இதயம் ஆகும். இதயம் இயங்குவதற்கும் ரத்தம் அவசியம். இரத்தக் குழாயில் அடைப்பு ஏற்படும் போது இதயத்தின் ஒரு பகுதி சேதமடைந்து உயிரிழந்து விடுகிறது.

இதய இரத்த நாளங்களில் நிரந்தரமாக அடைப்பு ஏற்பட்டாலோ அல்லது 30 நிமிடங்கள் முதல் 2 மணி நேரம் வரை அடைப்பு நீடித்தாலோ மாரடைப்பு ஏற்படுகிறது. அடைப்பு ஏற்பட்டுள்ள இரத்த நாளங்கள் இதயத்தின் எந்தப் பகுதியில் உள்ளதோ, அந்தப் பகுதியில் உள்ள இதயத் தசைகள், ஒட்சிசன் மற்றும் ஊட்டச் சத்தின்றி இயல்பு நிலைக்குத் திரும்ப முடியாத அளவு சேதமடைகின்றன. அதிக அளவு சேதமும் அல்லது அதிக அளவு காலம் தாழ்த்தினாலோ இதயத்தின் துடிப்பு நின்று

(22 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேடா உறவு

-கிருஷ்ணா



வாகன நெருக்கடி தொடங்க ஆரம்பித்திருக்கும் அந்த வேளையில் இருசக்கர வாகனத்தில் பாலாவும் அவனது நண்பனும் வேகமாக மற்ற வாகனங்களை முந்தி போய்க் கொண்டிருந்தனர்.

"ஏன்டா இவ்வவு வேகமா ஓடுறாய்? மெதுவா போடா" எனக் கத்தியவாறு நண்பனின் தோள்களை இறுக்க பற்றிக்கொண்டான் பாலா. அடுத்த நான்காம் நிமிடம் மோட்டார் சைக்கிள் புகையிர நிலையத்துக்குள் நுழைந்தது.

"பார்த்தியா மச்சான்! சொன்ன மாதிரியே எட்டு நிமிடத்தில கொண்டு வந்து விட்டிட்டேன்" எனப் பெருமிதம் கொண்டான் பாலாவின் நண்பன்.

"நல்லாய் போசாதே! பத்து நிமிடம் ஆகி விட்டது. அது மட்டும் இல்லாமல் இன்னும் இரண்டு மணி நேரம் கழிச்சு தான்டா ரெயின் வரும். அதுவரைக்கும் நான் என்னடா செய்யிறது?" அது உன்ர தலையெழுத்து என்பதைப் போல் பார்த்தான் நண்பன்.

"உன் ஆளைப் பார்க்கத்தானே இவ் வளவு வேகமாகப் போகிறாய். அவளிட்ட இன்றைக்கு முழுக்க திட்டு வாங்கப் போகிறாய்"

"தினமும் அதே கதைதான்" திரும்பாமல் சொல்லிவிட்டு புறப்பட்டான் நண்பன்.

ரெயினுக்கு நிறைய நேரம் இருப்பதால் தண்ணீர் போத்தல், பிஸ்கட் என ஒவ்வொரு கடையிலும் நேரத்தைக் கடத்திக் கொண்டிருந்தான் பாலா. அப்பொழுது ஒரு கடையில் உள்ள வானொலியில்ஒலித்த இதமான பாடல்களை ரசித்துக் கொண்டு புகையிரத நடைமேடை நோக்கி நடந்தான் பாலா.

காதில் 'ஹெட்போனை' மாட்டிக்கொண்டு 'வாட்ஸ்அப்பில்' நுழைந்து நண்பர்களைத் தொந்தரவு செய்யத் தொடங்கினான் அவன். 'ஹெட்போனில்' பாடல் ஏதும் போடாமல் வெறுமென மாட்டியிருந்ததால் ஏதோ கைபேசி அதிர்வுறும் சத்தம் அவனுக்கு கேட்டது.

சத்தம் வந்த திசை நோக்கி திரும்பினான். பக்கத்திலிருந்த இருக்கையில் அமர்ந்தி ருந்த வெள்ளை வேஷ்டி வெள்ளை சட்டை அணிந்திருந்த 50 வயது மதிக்கத்தக்க பெரியவரின் சட்டைப் பையில் அந்த கைபேசி அதிர்வுற்றுக் கொண்டிருந்தது. எனக்கென்ன என அமைதியாக இருந்தான் பாலா. சற்று நேரத்துக்குப் பின் மீண்டும் அதே சத்தம் கேட்க "அண்ணா தொலைபேசி" அவரது சட்டைப் பையை நோக்கி கையை நீட்டினான்.

சற்று திடுக்கிட்டவராக அந்த பெரியவர் உண்மையுணர்ந்து கைபேசியைக் காதுக்கு கொடுத்தார்.

"ம்..ஒரு மணிநேரம் முன்னமே வந்திட்டேன் பிள்ளை. புகையிரதத்தில் ஏறிவிட்டு உன்னை அழைக்கிறேன்" எனப் பதிலளித்து விட்டு கைப்பேசியை சட்டை பையில் போடும்போது பாலாவைப் பார்த்தார்.

"எந்த ஊர் தம்பி?"

"சொந்த ஊர் காராம்பணை. இங்கே சித்தப்பா வீடு" எனப் பதிலளித்துவிட்டு மீண்டும் வாட்ஸ்-அப்புக்குள் நுழைந்தான்.

"நமக்கு சொந்த ஊர் தலாம்பட்டி தம்பி. தம்பி நீ எங்கே போறாய்?" கேள்விகளைத் தொடர்ந்தார் பெரியவர்.

பாலாவுக்கு இவர் முன்பைப் போல பேசாமலே இருந்திருக்கலாமென்று தோன்றியது.

"கரகம்பிட்டிக்குப் போறேன்" எனப் பதிலை முடித்துக்கொண்டான் பாலா.

"என்ன தம்பி ஐ டி கம்பெனிக்கா?" ஏளனமாய்க் கேட்டார் அப்பெரியவர்.

'ஆமாம்'என்பதுபோல்தலையைஆட்டினான்.

"பெற்றோர்கள் என்ன செய்கிறார்கள்?" கேள்விகள் முடிந்ததாகத் தெரியவில்லை.

"அவர்கள் எனக்கு 12 வயசாக இருக்கும் போதே இறந்துவிட்டார்கள்" பல்லைக்கடித்துக் கொண்டு பதிலுரைத்துக் கொண்டு நண்பனைத் திட்டினான்.

வாழ்க்கை மீது வெறுப்புணர்வுடன் பேசி வந்த பெரியவர் சற்று நீளமாகப் பேசத் தொடங்கினார்.

"கொடுத்து வைத்தவர்கள் தம்பி. என்னைப் பாருங்கள்.நாலு நாளைக்கு முன்னால் என் ஒரே பையனும் அவன் பொண்டாட்டியும் வந்தாங்கள். 'தருமகிரியில் பெரிய வீடு இருக்கு. நாங்கள் கை நிறையச் சம்பாதிக்கிறோம். நீங்கள் ஏன் இங்கே இருந்து கஷ்டப்படுறீங்கள்?" என்று நிறையப்பேசினாங்கள். எனக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை .ஒரு நாள் முழு தும் பேசிப்பார்த்தார்கள்.அடுத்த நாள் மகன் வந்து நமது நிலத்தையும் .தோட்டத்தையும், வீட்டையும் மொத்தமாக விலை பேசினான். "நாளைக்கு காணி உறுதிப்பத்திர எழுத்து இருக்கு அப்பா" என்று சொன்னான்.

உங்கள் அம்மா தூங்குகிற நிலம். அதுவுமா?" என்று கேட்டேன்.

"அதை மட்டும் மிச்சம் வைச்சு யார் வந்து பாக்கிறது? என்னுடைய வீட்டுக்கு வாங்கோ அம்மா போட்டோவை உங்களுடைய அறையில பெரிய பிறேம் போட்டு தூக்கிவிடுகிறேன். கையெழுத்து மட்டும் போடுங்கள்" என்று சொன்னான்.

"நானும் போட்டுவிட்டேன் தம்பி. எல்லாரும் வீட்டை விட்டுப் போயிட்டாங்கள்.. என்னால முடியவில்லை" "சரியப்பா, இரண்டு நாள் ரைம் கேட்டிருக்கிறேன். இந்தாங்கோ ரிக்கெற். நாளையிண் டைக்கு ஏழு மணிக்கு ரெயின். 6 மணிக்கே போயி டுங்கள். என்று சொல்லிவிட்டுக் போய் விட்டான்.

"கரகம்பட்டி ட்ரெயின் இங்கே தான் வரும் என்று சொன்னார்கள்.அதுதான் ரிக்கெற்றோட இங்கே காத்திருக்கிறேன்" என்று தொடர்ந்து பேசியவர் பேச்சை நிறுத்தினார். அவர் கண்ணில் நீரில்லை. சோகம் முன்பை விட இப்போது அதிகமாக காணப்பட்டது.

அந்தப் பெரியவர் பேசப் பேச பாலா தனது கவனத்தை அவர் பேச்சில் வைக்க ஆரம்பித்திருந்தான். அவர் பேச்சின் முடிவில் பாலா கைபேசியை சட்டைப் பையில் போட்டுவிட்டுத் தன்னிடம் இருந்த தண்ணீர்ப் போத்தலை அவரிடம் நீட்டினான். அதை வாங்கிய பெரியவர் அதைக் குடிக்காமல் கையிலேயே வைத்துக்கொண்டிருக்க அவன் பேசத் தொடங்கினான்.

நான் ஐந்தாம் வகுப்புப் படிக்கும் போது காலையில நானும் அப்பாவும் உழவு முடித்து விட்டு அம்மா கொண்டு வந்த கஞ்சியைக் குடிக்க ஏரில பூட்டின மாட்டை ஓரமாகக் கட்டி விட்டு கரும்புக் காட்டுப் பக்கமாக இருக்கிற ஓடக்கரையில் சாப் பிட போனோம். நாங்கள் சாப்பிட்டுக் கொண்டு இருக்கும் போது பட்டாம் பூச்சியை பிடிக்கப் போனேன். வேண்டாம் சாப்பிடு என்று அப்பா தடுத்தார்.

பிடிச்சுக் கொண்டு வாறேன் என்று ஓட்டமாய் ஓடி விழுந்து எழுந்து பிடிச்சுக் கொண்டு வந்து பார்த்தால் அம்மாவும் அப்பாவும் பின் கழுத்தில் வெட்டப்பட்டு தலை குப்புற கிடந்தார்கள். கையில இருந்த பட்டாம்பூச்சியை விட்டிட்டு அது பறக்கிற வேகத்தைவிட வேகமாகப் போய் சித்தப்பாவைக் கூட்டிக் கொண்டு வந்தேன்.

கூட்டம் கூடியது. பக்கத்துக் காட்டுக்காரன் வெட்டிப் போட்டு ஓடினதாகப் பேசினார்கள். எனக்கு அழுகை வரவேயில்லை. இரண்டு நாள் கழிச்சு சித்தப்பா வேலையெல்லாம் முடிச்சு விட்டு என்னை இங்கே கூட்டிக் கொண்டு வந்து விட்டார்.

ஏரோட்டிய நான் பயிரை விதைக்காமல் என் அம்மாவையும் அப்பாவையும் புதைச்சுவிட்டு வந்து விட்டேன். அன்னை இல்லம் ஒன்றிலே தங்கி 'பி.ஏ' வரை படிச்சு விட்டு இப்ப வேலைக்குப் போகிறேன். இரண்டு மாதத்துக்கு முன்னால் சித்தப்பா கூட போய் நிலத்தையும் வீட்டையும் பார்த்து விட்டு வந்தேன். புல் பூண்டு முளைச்சுக் கிடக்குது.

என்ன செய்யிறது என்று சித்தப்பா கேட்க "நிலத்தையும், வீட்டையும் வித்து விட்டு வேலை பாக்கப்போற இடத்திலை வீடு வாங்கிக் கொள் என்று சொன்னார். அது பிடிக்காமல் இப்ப வேலைக்குப் போகலாம் என்று வெளிக்கிட்டு விட்டேன்.

உருக்கமாகப் பாலா சொல்லி முடிக்கும் போது "பயணிகளின் கவனத்துக்கு என ஆரம்பித்து கரகப்பிட்டி விரைவு ரெயின் இன்னும் சற்று நேரத்தில் புறப்படத் தொடங்கும் " என்ற அறிவிப்பு வெளியானது.

அந்த அறிவிப்பு ஹிந்தி, ஆங்கிலம் மற்றும் தமிழ் என மூன்று மொழிகளில் வெளியான சத்தம், ரீ, கோப்பி, எனக் கத்துகின்ற விற்பனையாளர்களின் சத்தம், பெட்டிகளைத் தரதரவென்று இழுத்துப் போகும் சத்தம் என இத்தனை சத்தங்களுக்கு மத்தியில் இவர்களுக்கிடையே அப்படியொரு அமைதி நிலவியது. பெரியவர் தண்டவாளத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.பாலா எதையோ யோசித்துக் கொண்டிருந்தான்.

அறிவிப்பின் கூற்று மெய்யானது போல் அடுத்த நான்காம் நிமிடம் புகைவண்டி நடைமேடையை எட்டியது. புகைவண்டி வந்து நின்றதும் பாலா மெதுவாக அந்த பெரியவர் பக்கத்தில் நகர்ந்து அவர் தோளைத் தொட்டான்.

"நீங்கள் போங்கோ தம்பி. நான் வாறேன்" என பார்வையைத் திருப்பாமல் சொன்னார்.

பஸ் நிலையத்துக்குப் போனால் பஸ் கிடைக்கும் என கூறிய பாலா சிறிய தயக்கத்துக்குப் பிறகு "போகலாமாப்பா" என்றான்.

சிறு குழந்தையாகப் புன்னகையுடன் தலையாட்டிய அவன் கையைப் பிடித்துக் கொண்டு அவரது கைபேசியையும் ரிக்கெற்டையும் இருக்கையிலேயே விட்டுவிட்டு ரயில் நிலையத்தை விட்டு வெளியே நடந்தார் அந்த பெரியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரொனி பிளேயரின் வகிபாகமும் 'தமிழருக்கு முன்னுள்ள சவாலும்!!



பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் ரொனி பிளேயர், கடந்த ஐந்து மாதத்திற்குள் இலங்கைக்கான இரண்டாவது பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

தனது முதலாவது பயணத்தின் போது இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஒகஸ்ட் 24ஆம் திகதி சந்தித்த ரோனி பிளேயர், தனது இரண்டாவது பயணத்தின் போது இராஜவரோதயம் சம்பந்தனை கடந்த ஜனவரி 3ஆம் திகதி சந்தித்துள்ளார்.

சர்வதேச ரீதியில் இலங்கை தொடர்பாக நிலவும் தவறான எண்ணங்களைக் களைவதற்குத் தான் உதவத் தயார் என மைத்திரிபாலவுடனான சந்திப்பில் ரொனி பிளேயர் தெரிவித்திருந்தார்.

போர்க்குற்றச்சாட்டும், பொறுப்புக்கூறல் தொடர்பான விடயங்களும் இன்றுவரை இலங்கையை சர்வதேச கவனத்திற்குள் வைத்துள்ளன.

அவ்வாறாயின், இவற்றை ரொனி பிளேயர் சர்வதேச ரீதியில் நிலவும் தவறான எண்ணங்கள் என கருதுகிறாரா? அத்துடன், இலங்கையை போர்க்குற்றச்சாட்டுக்களிலிருந்து மீட்கப்போகிறாரா என்ற கேள்விகள் இத்தருணத்தில் எழுவது தவிர்க்கப்பட முடியாதது.

இதேவேளை, ரொனி பிளேயரை இலங்கைக்கு அழைத்த வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும் போர்க்குற்றச்சாட்டுக்களிலிருந்து இலங்கையை காப்பாற்றும் நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்பட்டு வருவது கவனிக்கத்தக்கது.

மைத்திரிபாலவுடனான சந்திப்புக்கு அடுத்த நாள், ரொனி பிளேயர் காலஞ்சென்ற லக்ஸ்மன் கதிர்காமரின் பத்தாவது ஆண்டு நினைவுப் பேருரையை ஆற்றியிருந்தார்.

இந்தப் பத்தி எழுதப்படும் பொழுது, பொருளாதார மாநாட்டில் பங்கெடுப்பதற்காக இரண்டாவது தடவையாக இலங்கை வந்தடைந்துள்ள ரொனி பிளேயர் சம்பந்தனைச் சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில், இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் பேரவைத் தீர்மானம், பொறுப்புக்கூறல், அரசியல் தீர்வு, நிலங்கள் மீளக் கையளிப்பு மற்றும் மீள்குடியேற்றம் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்ட தாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஊடக பணியகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ரொனி பிளேயர் தற்போது பிரித்தானிய அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. மாறாக, தனது தனிப்பட்ட அமைப்பான 'ரொனி பிளேயர் ப்பெய்த்' நிறுவகத்தின் (Tony Blair Faith Foundation) சார்பாகவே இலங்கையுடனான உறவைப் பேணுகிறார்.

அவரது முன்னுக்குப் பின் முரணான செயற்பாடுகளால் ரொனி பிளேயர் சர்வதேச ரீதியில் சர்ச்சைகளுக்குள்ளானவர்.

சம்பந்தனுடன் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைத் தீர்மானம் மற்றும் பொறுப்புக்கூறல் போன்ற விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடிய ரொனி பிளேயர், கசகஸ்தான் பாதுகாப்புப் படைகள் மேற்கொண்ட பொதுமக்கள் படுகொலை ஒன்றினை எவ்வாறு கையாளலாம் என்பது தொடர்பாக கசகஸ்தான் அரசாங்கத்துக்கு பொதுசன உறவு தொடர்பாக ஆலோசனை வழங்கியவர். இதனால், இவர் கடும் விமர்சனத்துக்கும் உள்ளாகியிருந்தார்.

அத்துடன், 2007இல் அமெரிக்கா, ரஷ்யா, ஐ.நா. மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் மத்திய கிழக்குக்கான தூதராக நியமிக்கப்பட்ட ரொனி பிளேயர், 2015இல் அப்பதவியை துறப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டார்.

இஸ்ரேலுக்கு சார்பாக செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டும், முகமட் அபாசின் போட்டியாளரும் பலஸ்தீனத்தின் எதிர்கால தலைவராக வருவதற்கு விருப்பம் கொண்டு புகலிடத்தில் இருந்து செயற்பட்டு வருபவருமான மொகமட் டஹ்லனுடனான ரொனி பிளேயரின தொடர்பும் ரொனி பிளேயரின் நடுநிலைத் தன்மையை கேள்விக்குள்ளாக்கியது.

இதனால், 2015இல் ரொனி பிளேயர் தனது பதவியை துறக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

1999 மார்ச் 24 தொடக்கம் யூன் 10ஆம் திகதி வரை சேர்பியா மீது மேற்கொள்ளப்பட்ட நேட்டோ (NATO) விமானத் தாக்குதல்களின் பின்னணியில் ரொனி பிளேயர் முக்கிய பங்குவகித்தார்.

நேட்டோ குண்டுத் தாக்குதல்களால் சேர்பியாவின் உட்கட்டமைப்பு வசதிகள் சின்னாபின்னமானதுடன் சேர்பியா பேரழிவைச் சந்தித்தது.

இதன் விளைவாக, கொசோவோவில் சேர்பியா படைகள் மேற்கொண்டுவந்த இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டதுடன், ஐ.நா. அமைதி காக்கும் படை கொசோவோவில் நிலைநிறுத்தப்பட்டது. அத்துடன், கொசோவோ சுதந்திர தேசமாக மலர்வதற்கு அடித்தளமிடப்பட்டது.

சேர்பியாவின் இன்றைய பிரதமராகத் திகழும் அலெச்சன்டர் வுசிக் (Aleksandar Vucic) நேட்டோ குண்டுத் தாக்குதலின்போது மிலோசெவிக் அரசாங்கத்தின் தகவல்துறை அமைச்சராக பணியாற்றியவர்.

2005இல் இவரையும் ஆசிரியராக கொண்டு வெளியான English Gay Fart Tony Blair என்ற நூல் ரொனிய பிளேயரை கடுமையாக விமர்சித்தது.

சேர்பியா மீதான குண்டு தாக்குதல் இடம்பெற்று 16 ஆண்டுகளுக்குப் பிற்பாடு, சேர்பிய பிரதமர் அலெச்சன்டருக்கான ஆலோசகராக ரொனி பிளேயர் செயற்படுகிறார் என்று பெப்ரவரி 2015இல் உறுதிப்படுத்தப்பட்டது.

சேர்பிய பிரதமருக்கான ஆலோசனையை தனது

- நிர்மானுசன் பாலசுந்தரம்

இன்னொரு அமைப்பான Tony Blair Associates ஊடாக ரொனி பிளேயர் மேற்கொள்கிறார்.

சுகாதாரம், சட்டத்தின் ஆட்சி, கல்வி, பொருளாதாரம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் போன்றவை தொடர்பாகவே சேர்பிய பிரதமருக்கு ரொனி பிளேயர் ஆலோசனை வழங்குவார் என்று Tony Blair Associates ஐ மேற்கோள்காட்டி லண்டனைத் தளமாகக் கொண்ட த ரெலிகிராப் நாளிதழ் தகவல் வெளியிட்டது.



(18 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பெண்களின் எதிர்பார்ப்பு



வெறும் உடல் ரீதியான உறவுடன் தொடர்பை முடித்துக் கொள்ள விரும்புவதில்லை பெண்கள். அதற்கும் அப்பால் அவர்களது தேடுதல் மிகப் பெரியது. அது உண்மையில் அவர்களது மனங்களுக்கு ஆறுதலாக அமைகிறது என்பதை நிறையப் பேர் புரிந்து கொள்வதில்லை.

புரிந்து கொண்டால் உறவுகள் வலுப்படும், இனிமை கூடும். நிறையப் பெண்களுக்கு பேச்சு மிகப் பிடிக்கும். அன்பான, ஆறுதலான பேச்சை தங்களது பார்ட்னர்களிட மிருந்து நிறையவே எதிர்பார்க்கிறார் கள் பெண்கள். பேசிக்கொண்டே நடப்பது, பேச்சின் மூலம் அன்பை, நட்பை பகிர்ந்து கொள்வது அவர்களுக்கு மிகவும் பிடிக்கிறது.

நீண்ட தூரம் நடந்த படி பேசுவது என்பது இருவரது மனங்களையும் இலேசாக்க உதவும். இது ஒரு அருமையான அனுபவமும் கூட. நான் உன்னை எந்த அளவுக்கு நேசிக்கிறேன் என்பதை இருவரும் பரஸ்பரம் பகிர்ந்து கொள்ள, அந்த பேச்சு நடை உதவும். சில பெண்களுக்கு தங்களது புறத் தோற்றம் குறித்த கவலை இருக்கும்.


இதை தங்களது காதலர் விரும்புவாரா மாட்டாரோ என்ற கவலையும் அதிகமாகவே இருக்கும். இதன் காரணமாக தங்களை கூடுதலாக அழகாக்கிக் கொள்ள விரும்புவார்கள், முயற்சிப்பார்கள். அதே போல ஒரு ஆணை நேசிக்க தொடங்கி விட்டால் அவனின் புறத்தோற்றம் பற்றி கவலை படுவதும் இல்லை என்பது நிதர்சன உண்மை.

இதை ஆண்கள்தான் புரிந்து கொண்டு அவர்களது கவலையைப் போக்க முயல வேண்டும். உன் அழகு உருவத்தில் இல்லை, மனதில்தான் இருக்கிறது, உனது பேச்சுதான் உனக்கு அழகு, உனது சிரிப்புதான் அழகு என்று அவர்களுக்கு நம்பிக்கையூட்ட வேண்டும்.

அவர்களது தன்னம்பிக்கையை அதிகரிக்கும் வகையில் நடந்து கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட ஆண்கள்தான் உண்மையில் பெண்களுக்கு பெரும் துணைவர் களாக முடியும்.

# பாசிப்பருப்பு தோசை

### தேவையான பொருள்கள்



1. பாசிப்பருப்பு - 1 கப்
2. பச்சரிசி - 1/4 கப்
3. பச்சை மிளகாய் - 2 எண்ணம்
4. மல்லித்தழை - சிறிதளவு
5. உப்பு - தேவையான அளவு
6. எண்ணெய் - தேவையான அளவு.

### செய்முறை

1. பாசிப்பருப்பு, பச்சரிசியை தனித்தனியாக 2 மணி நேரம் ஊற வைக்கவும்.
2. ஊறிய அரிசியை முதலில் லேசாக அரைத்து, பிறகு பாசிப்பருப்பு, உப்பு, பச்சை மிளகாய் சேர்த்துக் கரகரப்பாக அரைக்கவும்.
3. அடுப்பில் தோசைக்கல்லைப் போட்டுக் காய்ந்ததும் மாவை ஊற்றி, அதன் மேல் நறுக்கிய கொத்தமல்லி தூவி, சுற்றிலும் எண்ணெய் விட்டு தோசைகளாக சுட்டு எடுக்கவும்.



# காதலிக்க முன்

காதல் எப்போது எங்கே எப்படி வரும் என்று தெரியாது என்பார்கள். இருந்தும் காதலிக்கும் முன் அனைவரும் உணர வேண்டிய விடயங்கள் பலவுண்டு. அவற்றுள் சில .

1) முதலில் உங்களை பற்றி உணருங்கள்.

2) உங்கள் குடும்பத்தை பற்றி யோசியுங்கள்.

3)உங்கள் குடும்பத்தில் காதலை ஏற்பாற்களா ? என்று சிந்தியுங்கள்.

4) நீங்கள் காதலிக்கும் நபரைப் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்.

5) அவருடைய குடும்பத்தைப் பற்றி விசாரியுங்கள்.

6) காதலிக்க நினைக்கும் நபரிடம் தோழமையோடு பழகி அவருடைய நல்ல / கெட்ட விசயத்தை தெரிந்து கொள்ளுங்கள்.

7) நீங்கள் காதலிக்கும் நபரைப் பற்றி உங்கள் வீட்டில் பேச உங்களுக்கு தைரியம் இருக்கின்றதா என்று சிந்தியுங்கள்.

8) காதலிக்கும் நபருக்கு விட்டு கொடுக்கும் மனம் இருக்கின்றதா என்று அறியுங்கள்.

9)உங்கள் வீட்டில் உள்ளவர்கள் சாதி, மதம் பார்ப்பவர்களா என்று யோசியுங்கள்.

10) அடுத்தவர்கள் காதலிக்கிறார்கள் என்று நீங்கள் காதலிக்காதீர்கள்.

இவை அனைத்தும் சரியாக இருந்தால் நீங்கள் தாராளமாகக் காதலிக்கலாம்.

நீங்கள் ஆராய்ந்தவற்றில் தவறு இருந்தால் காதலிக்க விரும்பாதீர்கள்.

நீங்கள் காதலித்து அது நடக்கவில்லை எனில் கஷ்டம் உங்களுக்கு மட்டும் இல்லை. நீங்கள் காதலிக்கிறவர்களுக்கும் கஷ்டம்,உங்கள் பெற்றோர்களுக்கும் கஷ்டம்.எனவே காதலிக்கு முன் சற்று யோசித்து செயல்படுங்கள் வாழ்வு சிறக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல் தோல்வியை கொடுத்து வாழ்க்கையில் வெற்றிபெற செய்தமைக்கு நன்றி கூறுங்கள்!!

ஆண்களுக்கும் சரி, பெண்களுக்கும் சரி வாழ்க்கையின் அர்த்தத்தை மொத்தமாய் உணர்த்தும் ஒரே தோல்வி காதல் தோல்வி தான். ஆயிரம் முறை தேர்விலும், வியாபாரத்திலும் தோற்றவர் கூட மீண்டும் அதே தவறை செய்ய வாய்ப்புகள் உண்டு. ஆனால், காதலில் அப்படி செய்பவர்கள் மிகவும் ஒருசிலர் மட்டுமே.

காதல் தோல்வியினால் அமில வீச்சு, கற்பழிப்பு, திட்டித் தீர்ப்பது, அவருடன் எடுத்துக் கொண்ட புகைப்படங்களை பரப்புவது போன்றவை அநாகரீகம். உங்களுக்கு நல்லது செய்தவருக்கு நீங்கள் முதலில் நன்றி தான் கூற வேண்டும். ஆம், காதல் தோல்வி கற்றுக் கொடுக்கும் வாழ்க்கை பாடங்கள் ஏராளம்.

வாழ்க்கை என்பது நிலையானது அல்ல; எல்லாமே கடந்து போவது தான் என்பதை அழுத்தமாக உணர்த்தும் செயல் காதல் தோல்வி. அதற்காகவும் கண்ணீர் சிந்தி பயனில்லை; நமது வாழ்க்கையின் அடுத்த கட்டத்தை நோக்கி முன்னேற வேண்டியது மட்டுமே நமது பணி.



**வலிமையை தரும்!**

ஓர் ஆணின் வாழ்க்கையில் காதல் தோல்வியை தாண்டிய பெரும் தோல்வி வேறேதும் இல்லை. இது அவனுக்கு வாழ்க்கையின் வலிமையை தரவல்லது. மனதளவில் முதலில் பாதிப்படைந்தாலும், பின்னாளில் இதே வலிமையாக அமைகிறது.

மேலும் வாய்ப்புகள் இருக்கிறது என உணர்த்துவதும் காதலே. முதல் தோல்வி முற்றிலும் தோல்வி அல்ல. அடுத்தடுத்த முயற்சிகளில் வெற்றி பெறலாம் எனும் பாடத்தை கற்பிப்பது காதல் தோல்வி தான்.

**அடுத்தக் கட்டம்!!!** வாழ்க்கையில் விளையாட்டாக இருக்கும் ஆண்களை முதிர்ச்சி அடைய வைப்பது சில காதல் தோல்விகள் தான். இவர்களுக்கு வாழ்க்கை என்றால் என்ன? வாழ்க்கையின் அடுத்தக் கட்டம் என்ன என்று உணர்த்துவதும் சில காதல் தோல்விகள் தான்.

**எல்லாம் நன்மைக்கே!!!**

நமது வாழ்க்கையில் தானாக நடக்கும் அனைத்துமே நன்மைக்கே என்பதை உணர்த்துவது காதல் தோல்வி தான். நூற்றில் பத்து பேர் தங்களுக்கான சிறந்த துணையை இழப்பது உண்டு. ஆனால், மற்ற 90 பேர் காதல் தோல்விக்கு பிறகு தான் தங்களுக்கு ஏற்ற உண்மையான துணை யாரென அறிகிறார்கள்.

## றொனி பிளேயரின் வகிபாகமும்...

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆயினும், காலப் போக்கில் சேர்பியாவுக்கு ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கத்துவம் கிடைப்பதற்காகவே இந்த நடவடிக்கைகள் தூரநோக்குடன் மேற்கொள்ளப்படுவதாக சேர்பியா விவகாரங்களில் நிபுணத்துவமுடையவர்கள் தெரிவிக்கின்றனர்.

கோசோவோ போரின்போது அல்பானியாவுக்கு ஆதரவாக செயற்பட்ட றொனி பிளேயர், 2013இல் அல்பானியா ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதற்கு உடன்பட்டிருந்தார்.

இதேவேளை, கொசோவோவின் சுதந்திரத்துக்குக் காரணமாக இருந்தவர்களில் ஒருவரான றொனி பிளேயரே காலப்போக்கில் கோசோவோவின் சுதந்திரம் இழக்கப்படுவதற்கு காரணமாக இருக்கப்போகிறார் என்ற செய்திகளும் சேர்பியாவில் உலாவுகிறது.

பூகோள அரசியல் போட்டியே கொசோவோ ஒரு சுதந்திர நாடாக உருவாகுவதற்கு உதவியது. சக்திமிக்க நாடுகளின் நலன்கள் பூர்த்தியடைந்ததை அடுத்து கோசோவோவின் நலன்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை.

இதனால், கோசோவோ தோல்வியடைந்த நாட்டின் நிலைக்கு மாறிவிட்டது. இதன் விளைவாக கோசோவோ பிரஜைகள் கோசோவோவை விட்டு வெளியேறி மேற்கு ஐரோப்பிய நாடுகளில் குடியேற ஆர்வம் காட்டுகிறார்கள்.

ஆயினும், சேர்பியா கடவுச்சீட்டுடன் ஒப்பிடுமிடத்து, கொசோவோ கடவுச்சீட்டுடன் [illegible]

கொசோவோ பிரஜைகளின் விருப்பத்தை அறிந்த கொண்ட சேர்பியா, கொசோவோ பிரஜைகளுக்கு சேர்பியா கடவுச்சீட்டு வழங்கத் தொடங்கியது.

மேற்கு ஐரோப்பாவில் வாழ்வதை நோக்காகக் கொண்ட கொசோவோ பிரஜைகள் தயக்கமின்றி சேர்பியா கடவுச்சீட்டுக்களைப் பெற்று வருகின்றனர்.

இதனூடாக சேர்பிய கடவுச்சீட்டு பெறும் கொசோவோ பிரஜைகள் சட்டரீதியாக சேர்பிய பிரஜைகளாகக் கருதப்படுவார்கள்.

அதேவேளை, 2008 பெப்ரவரியில் சுதந்திரமடைந்த கோசோவோவை சேர்பியா ஒரு சுதந்திர நாடாக இன்று வரை அங்கீகரிக்கவில்லை.

மாறாக, தனது நாட்டின் ஒரு பகுதியாகவே இன்றுவரை கருதுகிறது. கொசோவோ பிரஜைகள் சேர்பியா கடவுச்சீட்டு பெறுவதை ஊக்குவிக்கும் சேர்பியா, காலநீட்சியில் கொசோவோவில் ஒரு சர்வசன வாக்கெடுப்பை நடத்த திட்டமிட்டுள்ளது.

இந்த வாக்கெடுப்பின் ஊடாக கொசோவோவில் அதிக பெரும்பான்மையாக வசிப்பவர்கள் சேர்பிய பிரஜைகள் என்பதை வெளிப்படுத்துவதோடு, கொசோவோ தனிநாடாக தொடர்வதற்கான தகுதியை இழந்துள்ளது என நிரூபிக்க முயல்கிறது.

இதேவேளை, பொஸ்னியா மற்றும் ஹேர்சிகோவினாவில் [illegible] இணங்களுக்கிடையிலான [illegible]டதன் தாக்கமே இது.

காயத்தை குணமாக்கும் நோக்கோடு செய்யப்படாமல், மறைத்து கட்டும் நோக்கோடு செய்யப்பட்டதால் நல்லிணக்கத்துக்கான சந்தர்ப்பங்கள் பொஸ்னியா மற்றும் ஹேர்சிகோவினாவில் குறைந்தன.

விளைவு, மோதுகைகளுக்கான தீர்வான டேற்றன் உடன்படிக்கை (Dayton Agreement) கைச்சாத்தாகி சுமார் இரு தசாப்தங்கள் ஆகியுள்ள நிலையிலும் முரண்பாடுகள் தொடர்கிறன.

அதுமட்டுமன்றி, பொஸ்னியா மற்றும் ஹேர்சிகோவினாவில் வசிக்கும் சேர்பியர்கள், சேர்பியாவுடன் இணைவதற்கு முயன்று வருகிறார்கள்.

இதனை மறைமுகமாக ஊக்குவிக்கும் சேர்பியா, பொஸ்னியா மற்றும் ஹேர்சிகோவினாவில் வசிக்கும் சேர்பியர்களின் திட்டத்தை கணிசமான காலத்துக்கு பிற்போடுமாறு கோரியுள்ளது.

ஏனெனில், தற்போது கொசோவோவில் ஒரு சர்வசன வாக்கெடுப்பை நடாத்துவதும், பொஸ்னியா மற்றும் ஹேர்சிகோவினாவில் சேர்பியர்கள் வசிக்கும் பகுதியை சேர்பியாவோடு இணைப்பதும், ஐரோப்பிய ஒன்றியத்தில் சேர்பியாவுக்கான அங்கத்துவம் கிடைப்பதை பாதிக்கக்கூடும்.

ஆதலால்தான், நீண்டகால உத்திகளோடும், தந்திரோபாயங்களுடனும் சேர்பியா தனது நகர்வுகளை முன்னெடுக்கிறது. இவற்றிற்கான ஆலோசகராக றொனி பிளேயர் [illegible] கழிந்த நிலையில், கீரியும் பாம்பும் போல் இருந்த றொனி பிளேயரும் அன்று போர்க்குற்றவாளி எனக் கூறப்பட்டவரும் சேர்பியாவின் இன்றைய பிரதமராகத் திகழுபவருமான அலெச்சன்டர் வுசிக்கும் நல்லுறவை கட்டியெழுப்பியுள்ளனர்.

ஏதோ ஒரு வகையில் அன்று சேர்பியா அழிவடைவதற்கு காரணமாகவிருந்த றொனி பிளேயர் இன்று சேர்பியா வல்லமையோடு மீண்டும் நிமிர துணைபுரிகிறார்.

அதேவேளை, அன்று தனது பங்குடன் விடுதலையடைந்த கோசோவோவின் சுதந்திரம், எதிர்காலத்தில் இழக்கப்படும் ஆபத்தை நோக்கி செல்வதற்கு காரணமாக மாறிவருகிறார்.

இது அரசியலில், நிரந்தர எதிரியும் இல்லை, நிரந்தர நண்பனுமில்லை. மாறாக, நலன் மட்டுமே நிரந்தரமானது என்பதை புலப்படுத்துவதோடு, நடைமுறை சாத்தியம், யதார்த்தம் போன்றவை நிலையற்றவை என்பதை நிரூபித்துள்ளது.

ஆதலால், இதுதான் நடைமுறை சாத்தியம், யதார்த்தம் எனக் கூறிக் கிடைப்பதை பெற்றுக்கொள்வதையும் தருவதை வாங்கிக் கொள்வதையும் உடைய மனப்பாங்கை விடுத்து மக்களின் நலனுக்கு முன்னுரிமை கொடுக்கும் பொறிமுறைகளையும் தந்திரோபாயங்களையும் வகுத்து செயற்பட வேண்டும்.

அதுவே, ஒரு தேசத்தின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் நிர்ணயிக்கும். அந்த வகையில், றொனி பிளேயரின் பின்புலத்தையும் இலங்கை தொடர்பான அவரது நிகழ்ச்சி[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வார இராசி பலன்

**20.01.2016 – 26.01.2016**

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

**மேஷம்** பிறந்தவர்கள் ஓரளவு உதவுவர். வாகன பராமரிப்பு செலவு குறையும். பயணங்கள் இனிதாகும். புத்திரர்களின் செயல் பெருமை அளிக்கும். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவி கருத்து இணக்கம் கொள்வார். தொழில், வியாபாரம் செழித்து வளரும். பணியாளர்களுக்கு பணவரவு கூடும். பெண்கள். மகிழ்ச்சிகர வாழ்வு பெறுவர். மாணவர்கள் கருத்துடன் படிப்பர்.

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள்**

**ரிஷபம்** போக்குவரத்தில் கவனம் நல்லது. புத்திரர்களின் எதிர்பார்ப்பு நிறைவேற தாமதம் ஆகும் என்பதால், வருத்தம் கொள்வர். எதிர் மனப்பாங்கு உள்ளவர்களிடம் விலகி இருக்கவும். மனைவி குடும்ப நலனில் அக்கறை கொள்வார். அதிக உழைப்பால் தொழில், வியாபாரம் சீரான அ‹ வில் வளர்ச்சி பெறும். பணியாளர்கள் குளறுபடி வராமல் செயல்படுவது நல்லது பெண்கள், பிறருக்காக பணப்பொறுப்பு ஏற்க வேண்டாம்.

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள்**

**மிதுனம்** பசு, பால், பாக்ய யோகம் அமைந்து செல்வ வளம் பெருகும். உறவினர்களின் வருகை மகிழ்ச்சி தரும். வீடு, வாகனம் வாங்க அனுகூலம் உண்டு. புத்திரர்களின் எதிர்கால வாழ்வு சிறக்க சில பணிகளை மேற்கொள்வீர்கள். நிலுவைப்பணம் வசூலாகும். மனைவி வழி உறவினர் மதிப்பு, மரியாதை தருவர்.

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

**கடகம்** புத்திரர்களின் கேள்விகளுக்கு, உங்கள் அனுபவங்களை பதிலாகச் சொல்வீர்கள். எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். மனைவியின் எண்ணங்களுக்கு முக்கியத்துவம் தருவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்க, சில மாற்றங்களைச் செய்வீர்கள். பணியாளர்கள் பாதுகாப்பு நடைமுறை பின்பற்ற வேண்டும். பெண்களுக்கு தாய்வீட்டு உதவி கிடைக்கும்.

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

**சிம்மம்** புத்திரர்கள் உங்கள் சொல் கேட்டு நடப்பர். உடல்நிலையில் கவனம் தேவை. மனைவியின் அன்பு மனதிற்கு நம்பிக்கை தரும். தொழில், வியாபாரத்தில் சுமாரான பணவரவு இருக்கும். பணியாளர்கள் பணி இலக்கை நிறைவேற்ற கால தாமதமாகும். மாணவர்கள் சாகச விளையாட்டில் ஈடுபடக் கூடாது.

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள்**

**கன்னி** உடல்நலனில் பாதிப்பு வரலாம் என்பதால், அதிக கவனம் தேவை. மனைவியின் ஆலோசனை, குடும்ப எதிர்கால நலனுக்கு உதவும். தொழில், வியாபாரத்தில் வருகிற இடையூறை தாமதமின்றி சரி செய்ய வேண்டும். பணியாளர்கள் பணியிடத்தின் சூழ்நிலை உணர்ந்து செயல்பட வேண்டும்.

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள்.**

**துலாம்** வீட்டில் ஒற்றுமை மகிழ்ச்சி கூடும். முன்பு செய்த நற்செயலுக்குரிய பெருமை கிடைக்கும். பூர்வ சொத்தில் வளர்ச்சியும், பண வரவும் அதிகரிக்கும். கேதுவின் அமர்வு எதிரியின் மனதிலும் நல்ல மாற்றம் தரும். மனைவி விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி ஏற்படும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

**விருச்சிகம்** உடன் பிறந்தவர்களின் கருத்தை விமர்ச்சிக்க வேண்டாம். வாகன பாதுகாப்பில் கூடுதல் கவனம் வேண்டும். புத்திரர்களின் சிந்தனையில் நல்ல மாற்றம் ஏற்படும். எதிர்ப்பாளர்கள் பலமிழந்து போவர். மனைவியின் மனதில் நம்பிக்கை வளர உதவுங்கள். தொழில், வியாபாரத்திற்காக கூடுதல் மூலதனம் தேவைப்படும். பணியாளர்கள் பணி இலக்கை நிறைவேற்ற தாமதமாகும்.

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

**தனுசு** புதிய வாகனம், வீடு வாங்க நல்யோகம் உண்டு. அரசாங்க நன்மை கிடைக்கும். புத்திரர்கள் கருத்து பேதம் கொள்வர். வெகுநாள் பிரச்னை தீரும். மனைவியின் அன்பு, பாசம் நெகிழ்ச்சி தரும். தொழில், வியாபாரத்தில் லாபம் கூடும். பணியாளர்கள் அக்கறையுடன் பணிபுரிந்து சலுகை பெறுவர். பெண்கள் விருந்து, விழாவில் பங்கேற்பர். மாணவர்கள் பெற்றோரிடம் நன்மதிப்பு பெறுவர்.

**உத்தராடம் 2,3,4ஆம்பாதங்கள்.**

**மகரம்** புத்திரர்கள் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். உடல்நிலையைக் காக்க ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம். மனைவி வழி உறவினர்கள் உதவிகரமாக செயல்படுவர். தொழில், வியாபாரம் செழித்து சேமிப்பு அதிகரிக்கும். பணியாளர்கள், லட்சிய மனதுடன் பணிபுரிவர். பெண்கள், வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள், வெளியிடங்களில் சுற்றுவதை குறைக்கவும்.

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள்.**

**கும்பம்** குடும்பத்தில் சமரச பேச்சு நன்மையை தரும். மனைவியின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவது நல்லது. தொழில், வியாபாரம் புதியவர்களின் ஆதரவினால் சராசரி இலக்கை அடையும். பணியாளர்கள் பணியிடத்தில் பாதுகாப்பாக இருக்க வேண்டும். பெண்கள் வீட்டுச்செலவுக்கு சற்று திண்டாடலாம். மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் கொள்வர்.

**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

**மீனம்** மனைவியின் செயலை குறை சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் ஓரளவு லாபம் கிடைக்கும். பணியாளர்கள் புதிய தொழில் நுட்பங்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் செலுத்துவர். பெண்கள் செலவுக்கு திண்டாட நேரிடும். மாணவர்கள் பாதுகாப்பற்ற இடங்களுக்கு பயணம் செல்ல வேண்டாம்.

# சுதந்திர வேட்கை

## விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 120

அடேல் பாலசிங்கம்



காயமடைந்த போராளிகள் படுக்கையிலேயே கிடந்தார்கள். கிட்டு அம்மா பொறுப்பாக இருந்தார். அறுபதைத் தாண்டிய அந்தத் தாயார், அன்னைக்குரிய அரவணைப்போடு அவர்களைச் செல்லமாகப் பராமரித்துக் கொண்டிருந்தார். அவருடைய பேச்சில் நகைச்சுவை இருக்கும். கலகலவென்று சிரிப்பொலியும் குறும்பும் நையாண்டியும் இருக்கும். இருபத்தினான்கு மணி நேரமும் ஓடியாடிப் பணிபுரிந்து கொண்டிருந்தார். அவருடைய உறவினரும், அயலவர்களும் உணவு வழங்கியும் அவருக்காகக் கடைகண்ணிக்குச் சென்று உதவினார்கள். எனது மருத்துவத் தாதி ஆற்றலுடன் நானும் உதவி புரிந்தேன். புலிகளின் மருத்துவப் பிரிவுக்கு எனது உதவி, பளுவைக் குறைத்தது. பொட்டு அம்மானையும் வேறு சிலரையும் பராமரிக்கும் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டேன். பொட்டு அம்மானின் வயிற்றுப்புண் நன்றாகக் குணமடைந்தது. ஆனால் கையில் ஏற்பட்ட காயம் மட்டும் மாறுவதாக இல்லை. பெரிய கட்டுப் போட வேண்டியிருந்தது. ஆனால் ஊநீர் கசிந்து கொண்டிருந்தது. பெரிய புண். பயங்கர வலி. உள்ளூர் மருத்துவமனையில் அடிக்கடி மயக்க மருந்து எடுத்து அதன் பின்னரே மிகக் கவனமாகத் துப்பரவு செய்ய வேண்டியிருந்தது. பொட்டு அம்மான் உட்பட கடுங்காயம் அடைந்தவர்களை, பருத்தித்துறை , மந்திகை மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் போது நானும் உடன் சென்றேன்.

மந்திகை மருத்துவமனையில் போரின் பாதிப்பு அப்பட்டமாகத் தெரிந்தது. குண்டுச் சிராய்களோடு பொதுமக்களும், காயமடைந்த போராளிகளும் மருத்துவமனைப் படுக்கையில் நிரம்பி வழிந்தார் கள். இனித் தாங்காது என்ற அளவுக்கு அங்குள்ள மருத்துவ வளங்கள் , வற்றும் அளவுக்குப் பயன்படுத்தப்பட்டன. அங்குள்ள மருத்துவர்களுக்கு உதவியாக நோபல் பரிசு பெற்ற சர்வதேச பிரெஞ்சு மருத்துவ நிறுவனத்தைச் சேர்ந்த மருத்துவர்களும் பணியாற்றினார்கள். ஒரு தடவை எமது வழமையான மருத்துவமனைப் பயணத்தின் போது இரத்தம் ஓட, ஓட வலி தாங்க முடியாது அரற்றிக் கொண்டிருந்த பல பொதுமக்கள் தொடர்ந்து மந்திகை மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டார்கள். சாவகச்சேரிப் பக்கத்தில் இருந்து அவர்கள் வருவது தெரிந்தது. இந்திய அமைதிப் படையினரால் சாவகச்சேரியில் பெரியதொரு தாக்குதல் நடத்தப்பட்டதாக காயப்பட்டவர்களும், அவர்களோடு கூடி வந்தவர்களும் கூறினார்கள்.

அந்த நாள் 1987 ஒக்ரோபர் 27 ஆம் திகதியாகும். இந்திய இராணுவத்தின் வரலாற்றில் வெட்கப்பட வேண்டிய நாளாகவும் அது அமைந்தது. இயந்திரத் துப்பாக்கிகளும், ஏவுகணைகளும் பொருத்திய உலங்கு வானூர்திகள் சாவகச்சேரி நகருக்கு வந்து, உள்ளூர்ச் சந்தைக்கு மேலே வட்டமிட்ட வண்ணம் இருந்தன. சந்தையில் அடர்த்தியான சனத்திரள், ஆறுதலாகச் சாமான் வாங்குவதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். மக்கள் எதிர்பாராத நிலையில், உலங்கு வானூர்த்திகள் திடீரென்று மக்களைக் குறி வைத்து தாக்குதலை நடத்தின. வானூர்திகளிலிருந்து ஏவப்பட்ட ஏவுகணைகள் மக்கள் மத்தியில் விழுந்து வெடித்துச் சிதறின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணம் தீட்டுவோம்



இந்த இரு படங்களிலும் உள்ள வித்தியாசங்களைக் கண்டு பிடியுங்கள்



## மார்க்ட்வைன் உதவாக்கரையா?

LDITர்க்ட்வைன் ஆரம்ப காலத்தில் பத்திரிகை ஒன்றில் ஆறுமாத காலம் பணியாற்றினார். ஒருநாள், ஆசிரியர் அவரை அழைத்துச் சொன்னார்:

நீ ஒரு உதவாக்கரை, சோம்பேறி, இனி நீ வேலைக்கு வரவேண்டாம்

உடனே மார்க்ட்வைன், நீங்கள் ஒரு மகா மடையர் என்றார்.


இதைக் கேட்டு ஆசிரியர் அதிர்ச்சியடைந்தார்.

அடுத்து ட்வைன், நான் ஒரு உதவாக்கரை என்பதைத் தெரிந்து கொள்ள உங்களுக்கு ஆறு மாத காலமாகியிருக்கிறது. இது, எனக்கு எப்போதோ தெரியும் என்றார்.

**- தேனி.**



# கடவுளாக முடியுமா?



ஒரு ஊரில் அதிபுத்திசாலி ஒருவன் இருந்தான். அவனை யாருமே ஏமாற்ற முடியாது. அவனுக்கு மிகப்பெரிய பிரச்சினை ஒன்று இருந்தது. எதையுமே அவ்வளவு சீக்கிரத்தில் மறக்க மாட்டான். அவனுக்கு அதிகமான நினைவாற்றல்.

ஒரு நாள் அவன் கடவுளிடம், இறைவா, எனக்கு அதிகமான நினைவாற்றல் இருக்கிறது. யார் நல்லது செய்தாலும், எனக்கு மறக்க முடியவில்லை. அதே சமயத்தில் யார் தீயதைச் செய்தாலும் மறக்க முடியவில்லை. இதனால் எனக்குப் பைத்தியமே பிடித்து விடும் போலிருக்கிறது என்று சொன்னான்.

அவனுடைய தொடர் வேண்டுதலைக் கேட்ட கடவுளும் ஒரு நாள் நேரில் வந்தார். அவர், புத்திசாலியே உன்னுடைய பிரச்சினைதான் என்ன? எதுவாக இருந்தாலும் அதற்கு ஒரு தீர்வு உண்டு என்றார்.இவனும் பிரச்சினையைச் சொன்னான். அதைக் கேட்ட அவர், உன்னுடைய அதிக நினைவாற்றல் உனக்கு நல்லது தானே... இதற்கு ஏன் வருத்தமடை கிறாய்? என்று கேட்டார்.

அவன், இறைவனே, இந்த நினைவாற்றலினால், எனக்குச் சரியாகத் தூங்க முடியவில்லை? என்றான்.

அதற்குக் கடவுள், நீ யாருக்கெல்லாம் நல்லது செய்கிறாயோ, அதை உடனடியாக மறந்துவிடு. அப்போதுதான் மேலும் நல்லது செய்யும் எண்ணம் வரும். உதாரணத்திற்கு நீ யாருக்காவது இரத்ததானம், படிப்புக்கு உதவி, இல்லாதவர்களுக்கு உதவி என்று செய்தால் அதோடு நிறுத்திக் கொள்ளாதே, அவர்களுக்குச் செய்ததையே நினைக்காதே. நல்ல விஷயத்தை மறந்து விடு. அப்போதுதான் மேலும் மேலும் உதவி செய்ய முடியும். அதே போல யாருக்காவது தீங்கு செய்தால் அதை மறக்காதே அப்போதுதான் அந்தத் தவறை மீண்டும் செய்யமாட்டாய். மனதாலே நீ திருந்தி நல்ல செயலைச் செய்யமுடியும் என்றார்.

இதைக் கேட்டதும் அவன், இறைவனே, அப்படியானால், நானும் யாராவது எனக்கு நல்லது செய்தால் மறக்க வேண்டுமா? அதுபோல யாராவது எனக்கு தீயதைச் செய்தால் மறக்கக் கூடாதா? என்றான்.

கடவுள், உனக்கு நல்லது செய்தவர்களை நீ நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு நீ நல்லது செய்யவேண்டும் என்கிற எண்ணம் வரும். பிறர் தீயது செய்தால் அதை அப்போதே மறந்து விட வேண்டும். அப்போதுதான் அவரை நீ மன்னிக்கின்ற குணம் வரும் என்றார்.

உடனே கடவுளிடம் அந்தப் புத்திசாலி, கடவுளே, இவ்வளவு சிறப்பாகப் பேசுகிறாயே, பேசாமல் உன் கடவுள் பதவியை எனக்குக் கொடுத்து விடுங்கள் என்று கேட்டான்.

அதற்கு கடவுள் சொன்னார்.

உன் மனதில் கடந்து உள்ளே சென்று பார். கடந்து+உள் செல். அங்கே நீதான் கடவுள் என்று சொல்லிவிட்டு மறைந்து போனார்.

**- சுபராம்,**



[illegible]

# சிறுவர் கைவண்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப்புனல்

## விதியின் பெயரில் சதியா?



புத்தகப்பை சுமக்கும்
வயதில்
விதி தடுத்து நிறுத்தியது
வறுமை

மூட்டை சுமக்கும்
எனக்குள்ளேயும்
ஆயிரத்தெட்டு
கனவுகள்

வெள்ளாடை அணிய
ஆசைகொண்டேன்
அழுக்காடை என்
மானத்தைக் காத்தது

என் வயதில்
எல்லோரும்
பள்ளிக்குப் போகிறார்கள்
எனக்கு மட்டும்
ஏன் இந்தப் பிறவி

இரவெல்லாம் இங்கு
இருளாய்
என் உளமெல்லாம்
இங்கு வாழ்விழந்த
வரியாய்

கனவு காண்கிறேன்
அப்துல்கலாமாய்
ஆகாவிட்டாலும் கூட
அறிவுள்ள ஆசாமியாய்
வாழ்வதற்கு

என் வாழ்வுக்குள்
அமைக்கப்பட்டது
அடக்கப்படுவது
விதியா?
விதியின் பெயரில் சதியா?

**வே.வே. அகிலேஸ்வரன்,**
**மருதங்கேணியூர்.**


## நண்பனின் நினைவுகள்

நான்
எப்போதுமே தனியே ....
வாழ்ந்ததில்லை ....
நண்பனின் நினைவுகள் ...
எப்படி தனியே வாழவிடும் ....?

தனியே
எங்கும் போனதுமில்லை ....
நிழலாக நண்பன்
வந்துகொண்டே இருக்கிறான் ...!!!

**-இனியவன்**

## விழித்தன விழிகள்



இரவெனும் நதியிலேகி வண்ணக்
கனவெனும் படகிலேறி வானில்
மிதந்து சென்ற உணர்வினையேந்தி
வியந்து நின்ற வகையிங்கு பகர

சின்னச் சின்னச் நட்சத்திரங்கள்
சொன்ன பல சுவையான கதைகள்
வண்ண முழு நிலவது தானும்
மெல்லத் தேயும் விந்தை விளக்க

தவழ்ந்து மெல்ல நகரும் வெண்முகில்
கனத்த பொழுதொன்றில் தானும்
கறுத்துக் கார்மேகமாய் பொழியும்
கனத்த மழையின் காரணம் சொல்ல

அனைத்தும் கலைந்து மறைந்து
போக
ஆதவன் கதிர்களை ஒளியாய்ப்
பொழியும்
வேளை வந்தது என்றே அருகிருந்த
அலாரம் அலற விழித்தன விழிகள்

**-சக்திதாசன்**




இன்றைய அவசர உலகில் பலரும் பணம் பணம் என்று அலைந்து கொண்டிருக்கிறார்கள். எனினும் சிலர் எவ்வளவோ கஷ்டப்பட்டு உழைத்த பின்பும் அதனைச் சரியான முறையில் செலவு செய்யத் தெரியாமையால் பணக்கஷ்டத்துக்கு ஆளாகிக்கொண்டிருக்கிறார்கள். எனவே நாம் ஒவ்வொரு விடயங்களையும் திட்டமிட்டு சரியான முறையில் செலவு செய்தோமானால் நமது பணமும் சேமிப்பாகும் வாழ்வும் சிறக்கும் . அவ்வாறு திட்டமிட்டுச் செய்யக் கூடிய சில வழிமுறைகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளது. படித்துப் பாருங்கள்.( கடந்தவாரத் தொடர்ச்சி )

### போக்குவரத்து

- பயணங்களைக் குறையுங்கள்.
- பல பல சிறு வேலைகள் இருந்தால் அவற்றை எல்லாம் ஒன்றாக ஒரே பயணத்தில் செய்யுங்கள்.
- குறைந்த செலவு போக்குவரத்து வழியைப் பயன்படுத்துங்கள். ( நடை, மிதிவண்டி, பொதுப் போக்குவரத்து)

### தூய்மையாக்கல்

- கையால் தோயுங்கள்.
- சூரிய ஒளியில் உலரவிடுங்கள்.
- கை துடைக்க, துப்பரவு செய்ய காகித துடைப்பான்களைப் பயன்படுத்தாதீர்கள், மாற்றாக துணியைப் பயன்படுத்துங்கள்.
- பாத்திரங்களைக் கழுவ கரியைப் பயன்படுத்துங்கள்.
- நீங்களே தேவையான தூய்மையாக்கல் பொருள்களை உருவாக்குங்கள்.

### நிதி

- யதார்த்தமான வரவுசெலவு உருவாக்கிப் பின்பற்றுங்கள்.
- தேவை எது, ஆசை எது என்பதை உணர்ந்து தேவைகளுக்கு முன்னுருமை கொடுங்கள்.
- சிக்கனம் கடைப்பிடித்து கடனை அடையுங்கள்.
- ஒவ்வொரு சம்பளத்தில் இருந்தும் குறிப்பிட்ட அளவு சேமிப்புக்கு தானாக செல்லும் படியாக வங்கியில் ஏற்பாட்டைச் செய்யுங்கள்.
- ஆபத்துத் தேவைகளுக்கு என்று 3-6 மாதங்களுக்கு உங்கள் வாழ்க்கையை நகர்த்தத் தேவையான பணத்தைச் சேமித்து வையுங்கள். குறைந்த பட்சம் திடீர் விபத்து அல்லது மருத்துவ தேவைகளை சமாளிக்கத் தேவையான ஆபத்துதவித் தொகையை சேமியுங்கள். இதனால் உயர் வட்டிக் கடன் அட்டையைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கலாம்.

### பொருள் வாங்கல்

- பொருள்களை வாங்குவதற்கென சந்தைக்குச் செல்வதைத் தவிருங்கள்.
- வாங்குவதைக் குறையுங்கள். பகிர்வை, கூட்டு நுகர்வைக் கூடுதலாகப் பயன்படுத்துங்கள்.
- தளபாடங்கள், கருவிகள் மற்றும் பிற பொருள்களை வாங்க முன்பு இணையத்தில் விலைபட்டியல் மற்றும் எங்காவது இலவசப் பகிர்வகங்கள் போன்றவற்றில் கிடைக்கின்றனவா என்று பாருங்கள்.
- விலை ஒப்பிட்டு ஆய்வு செய்து பொருள்களைக் கொள்வனவு செய்யுங்கள்.
- பெயருக்காக வாங்காமல், பயன்பாட்டையும் தரத்தையும் கருத்தில் கொண்டு வாங்குங்கள்.
- கழிவு விலையில் உள்ளதா, கழிவுச் சீட்டைப் பயன்படுத்தலாமா என்று அறிந்து அவற்றைப் பயன்படுத்துங்கள்.
- பேரம் பேசி வாங்குங்கள்.
- பெரிய பொருள்களை திட்டமிட்டுச் சேமித்து வாங்குங்கள்.
- என்ன தேவையான பொருள்கள் என்று பட்டியல் இட்டு, பொறுத்திருந்து வாங்குங்கள்.
- பெரும் நிறுவனங்கள் ஆயின் அவ்வப்போது தொலைபேசி எடுத்து முறையீடு செய்து, பேரம் பேசி சேவைகளுக்கான பணத்தைக் குறைக்கக் கேளுங்கள். இல்லாவிடின் போட்டி நிறுவனத்துக்கு சென்று விடுவீர்கள் என்று வெருட்டுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரவசப்படுத்திய.....

( 23 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பல வடிவங்களினலான பட்டங்கள் வானில் வலம் வந்த போது, ஆச்சரியங்களும் மகிழ்வும் ஒரு சேர அனைத்து மக்களும் குறிப்பாக சிறுவர்கள் பெருமளவில் ஆரவாரித்து மகிழ்ந்தனர்.

ஒவ்வொரு பட்டடத்துக்கும் பல கலைஞர்களின் நீண்ட கால உழைப்புக்களையும் அர்ப்பணிப்புக்களையும் காணக் கூடியதாக இருந்தது. அந்தக் கலைஞர்களின் சிந்தனையையும் கற்பனையையும் மிகவும் பாராட்ட வேண்டும். வல்வை மண்ணில் இருந்து பங்கு பற்றும் போட்டியாளர்கள், ஒரு மாதத்திற்கு முன்னரே இந்த ஏற்பாடுகளில் ஈடுபட்டு விடுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. பல ஆயிரம் மக்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலவர் க.வி.விக்கினேஸ்வரன் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

எங்களுடைய தனித்துவ அடையாளங்களின் பேணுதல் என்பது வாழ்க்கைக்கு மிகவும் அத்தியாவசியமான ஒன்று. தமிழகத்தில் தற்போது சூடு பிடித்து அதாவது தை மாதமளவில் இடம்பெறும் ஜல்லிக்கட்டுப் போட்டிகளை காண ஆவல் கொள்ளும் மக்களினுடைய எதிர்பார்ப்புகளைப் போலவே இப்போது தைப் பொங்கல் என்றால் வல்வை மண்ணுக்கு விரையும் ஒரு வழக்கம் உருவாகியிருக்கின்றது. மக்களிடம் உள்ள தனி ஆளுமைகளை வெளிப்படுத்துவதற்கான களமும் வாய்ப்பும் இல்லாத போது, எமது மக்களின் மிகப்பல ஆளுமைகள் மறைக்கப்பட்டன. மறைந்தும் போயின. தனிமனித ஆளுமைகள் களம் கொடுக்கும் இத்தகைய சிறப்புக்குரிய பட்டப் போட்டிகள், எமக்குள்ளே இருக்கின்ற கலைத்துவத்தின் தனித்துவத்தை கண் முன்னே கொண்டுவர நல்ல வாய்ப்பு அளிக்கிறது எனின் மிகையல்ல.

வல்வை மண்ணில் இடம்பெற்ற இந்தப் போட்டிகளும் அங்கு இடம்பெற்ற கலை சார் அம்சங்கள் நிறைந்த நிகழ்வுகளும் தமிழ் மக்களுடைய கலாசார பண்பாட்டு அம்சங்கள் நிறைந்தவையாக இருந்ததோடு மட்டுமன்றி அனைத்து மக்களையும் ஒன்றிணைக்க வழி செய்தது தைத்திருநாள் பண்பாட்டு அம்சங்களோடு வழங்கிய வகையில், இந்தப் பட்டப் போட்டி கால ஓட்டத்தின் ஒரு வரலாற்று அம்சமாகும்.

## தொடரும் தொட்டில்.....

( 03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த அரசாங்க காலத்தில் மேற்கொள்ளப்பட்ட இத்தகைய அநீதிகள் தொடரக்கூடாது என்பதற்காகவே 19ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் மனித உரிமைகள் ஆணைக்குழு உட்பட சிறப்பு அதிகாரங்கள் கொண்ட ஆணைக் குழுக்கள் அமைக்கப்பட்டன. அதீதச் சட்டத்தைக் கொண்டு வந்த அரசாங்கத்தின் நீதியமைச்சரே அதன் மூலம் அமைக்கப்பட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகார வரையறைகளை கண்டனம் செய்கிறார் என்றால், இந்த ஆட்சியிலும் ராஜபக்ஷ வம்சத்தின் அராஜக நிழல் படிகிறதா என்ற கேள்வி எழுகிறது.

கடந்த அரசாங்க காலத்தில் பொலிஸாரும், அரசியல் அதிகாரம் படைத்தவர்களும், அதிகார துஸ்பிரயோகங்களை மேற்கொள்ளவும், சட்டத்தைத் தமது தேவைக்கேற்ப வளைக்கவும் வாய்ப்புகள் நிலவின. பொலிஸார் முதற்கொண்டு சில அரசியல்வாதிகள் உட்பட பொதுபலசேன வரை எந்தக் குற்றத்தை இழைத்து விட்டும் தண்டனையின்றி சுதந்திரமாக உலவ முடிந்தது.

தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை என்று கூறுவார்கள். பொலிஸார் அந்தத் தொட்டில் பழக்கத்திலிருந்து இன்னும் விடுபடவில்லை என்பதைப் பல சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. அவற்றைத் தடுத்து நிறுத்தி நீதியை நிலைநாட்டுவது நீதி யமைச்சரின் கடைமை. ஆனால் நீதியமைச்சர் அவற்றை நியாயப் படுத்த முனைவது நிச்சயமாக நல்லாட்சிக்கு விரோமானதே. எப்படியிருப்பினும் ராஜபக்ஷ வம்சத்தின் பழக்க வழக்கங்கள் முற்றாகவே துடைத்தெறியப் படும் வரை நல்லாட்சியை நிலைநிறுத்துவது சாத்தியமில்லை.

## நேதாஜியின் இறப்புக்கு.....

( 08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தார்.

என்னிடம் பேசினால் கூட இந்திய சுதந்திரம் பற்றித்தான் அவரது பேச்சு இருந்தது. தான் இறக்கும் சந்தர்ப்பத்தில் இந்தியாவின் சுதந்திரத்தை பற்றிதான் பேசிக்கொண்டுதான் இறந்ததாக தனது சக தோழர்களிடமும் அறிவிக்கச் சொன்னார்.

" நான் கடைசி வரை இந்தியாவின் சுதந்திரத்துக்காகவே போராடினேன். எனது இறப்பும் அதே முயற்சிக்காகவே நிகழ்ந்துள்ளது. தோழர்களே கடைசி வரை போராட்டத்தை கைவிட்டு விடாதீர்கள்" என்பதே நேதாஜி இந்திய சுதந்திர போராட்ட வீரர்களுக்கு அளித்த இறப்பு செய்தி. இந்த விபத்தில் லெப்டினன்ட் ஷிடாய், மற்றும் இரு ஜப்பானிய கொமாண்டர்களும் இறந்து போனார்கள்.

மற்றவர்கள் எல்லாருக்கும் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. நேதாஜி இறந்ததும் அவரது உடலை டோக்கியோவுக்கு அல்லது சிங்கப்பூருக்கோ கொண்டு செல்ல வேண்டுமென்று நான் வலியுறுத்தினேன்.

சிங்கப்பூர் கொண்டு செல்ல வேண்டுமென்பதே எனது நோக்க மாக இருந்தது. தேவையான உதவிகள் செய்யப்படுவதாக வாக்களிக்கப்பட்டது.

விரைவில் சவப் பெட்டிக்கு ஏற்பாடு செய்யப்படுவதாகவும் விபத்து குறித்து சைகூன் மற்றும் டோக்கியோவுக்கு தகவல் அளிக்கப்பட்டுள்ளதாக என்னிடம் கூறப்பட்டது.

நேதாஜி இறந்து 3 நாட்களுக்குப் பின்னர், அதாவது 21ஆம் திகதி அவரது உடலை எடுத்துச் செல்வது சாத்தியமில்லை. எனவே அவரது உடலை தைஹோகூவிலேயே எரித்து விடுமாறு என்னிடம் தகவல் தரப்பட்டது. எனக்கும் வேறு வழி தெரியவில்லை.

நானும் அதனை ஏற்றுக்கொண்டேன். தொடர்ந்து 22ஆம் திகதி நேதாஜியின் உடலை ஜப்பானிய இராணுவ அதிகாரிகள் உதவியுடன் எரித்தேன். பின்னர் 23ஆம் தேதி நேதாஜியின் சாம்பலை சேகரித்தேன்.

நேதாஜியின் அஸ்தியை டோக்கியோவில் ஒரு இடத்தில் பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டு, தக்க சமயத்தில் இந்தியா கொண்டு செல்லலாம் என்று எனக்கு அறிவுரை கூறப்பட்டது.

எதிர்பாராமல் நடந்த விபத்தின் உண்மை நிலவரம் இதுதான். நான் ஜப்பானிய அதிகாரிகளிடம் நேதாஜியின் அஸ்தியை பத்திரப்படுத்தி வைக்குமாறு கேட்டுக் கொண்டேன்.

அப்போதுதான் என் தேசத்தின் தன்னிகரற்ற தலைவனை ஒரு உண்மையான ஹீரோவை வருங்கால சந்ததியினர் அறிந்து கொள்ள முடியும்."

எனக் கேணல் ஹபீபூர் ரஹ்மான்கான் தனது கடிதத்தில் எழுதியுள்ளார்.

ஆனாலும் நேதாஜி விமானவிபத்தில் இறந்ததை ஒரு தரப்பினர் நம்பவில்லை. இதில் மர்மம் இருப்பதாகக் கூறி வருகின்றனர்.

## மாரடைப்பே நலமா.....

( 14 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுகிறது.

இதயம் விரிந்து 'ஹார்ட் ஃபெய்லியர்' (இதயத் தசை முற்றிலும் வலுவிழந்து இரத்தத்தை 'பம்ப்' செய்ய முடியாத நிலை) ஏற்படலாம். எனவே மாரடைப்புக்கு உடனடியாக அவசர சிகிச்சை அவசியம்.

**மாரடைப்பைத் தடுக்கும் வழிமுறைகள் என்ன?**

மாரடைப்பு வராமல் தடுப்பதற்கு நமது பங்கு மிகவும் அவசியம். உணவின் அளவைக் குறைக்க வேண்டும். 2 இட்லி, தோசை, சப்பாத்தி சிறிது அரிசி சாதம், அதிக அளவு காய்கறிகள், கீரைகள் ஆகியவற்றைச் சாப்பிட வேண்டும். அதிக கொழுப்புள்ள முட்டையின் மஞ்சள் கரு, விலங்குகளின் புரதம் அடங்கிய கறிகள், பெரிய கொழுத்த மீன்கள், ஈரல் போன்றவற்றை தவிர்க்க வேண்டும். அதிக கலோரி கொண்ட பரோட்டா, பீஸா, பேர்கர், பொரித்த உணவுகளைத் தவிர்க்க வேண்டும்.

**நடைப் பயிற்சி உதவும்:**

ஆரோக்கிய வாழ்வுக்கு உடல் அசைவு அவசியம். இருந்த இடத்தில் இருந்தே வேலை பார்ப்பது, நீண்ட நேரம் தொலைக்காட்சி, கணினி பார்ப்பது ஆகியவை உடல் ஆரோக்கியத்துக்குக் கெடுதல் தரும் விஷயங்களாகும். தினமும் சாப்பிடுவதற்கு முன் 45 நிமிடம் விறுவிறுவென்று வேகமாக நடப்பது நல்லது. மாடிகளில் ஏறி இறங்க படிகளை உபயோகிப்பது நல்லது.

நமது வாகனங்களை விடுமுறை நாள்களில் நாமே கழுவி சுத்தம் செய்யலாம். செடிகளுக்கு நாமே தண்ணீர் ஊற்றலாம். புகைப் பழக்கம், மது அருந்துவதை நிரந்தரமாக விட்டு விட வேண்டும்.

புகை, மது, கொழுப்புள்ள உணவு ஆகிய மூன்றும் மாரடைப்பின் நண்பர்கள். சர்க்கரை நோய், உயர் இரத்த அழுத்தம், இரத்த கொழுப்புச் சத்து இருந்தால் மருத்துவ ரீதியாக அவற்றைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். மன நிம்மதி, அமைதி மிகவும் முக்கியம். யோகா, தியானம் ஆகியவை மன அழுத்தத்தை நீக்கி ஆயுளை அதிகரிக்கிறது.

30 வயதான அனைவரும் முழு உடல் பரிசோதனை செய்து கொள்வது முக்கியம்.

நெஞ்சு வலி ஏற்பட்டால், உயிர் காக்கும் பொன்னான முதல் ஒரு மணி நேரத்துக்குள் மருத்துவ மனைக்கு பாதிக்கப்பட்டவரை அழைத்துச் செல்வது அவசியம்.

நமக்கு ஒரு வாழ்க்கைதான்
நமக்கு ஒரு இதயம்தான்
இதயம் நமக்காகத்தான்
இதயத்தைப் பாதுகாப்போம்
இனிமையாக வாழ்வோம்!

நன்றி: தினமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பரவசப்படுத்திய பட்டத்திருவிழா

- வெற்றி.துஷ்யந்தன்



தமிழர்களின் வாழ்வும் வளமும் அவர்களுடைய கலை கலாசார பண்பாட்டு அம்சங்களோடு பின்னிப்பிணைந்த ஒன்றாகவே பல காலமாக இந்த மண்ணில் இருந்து வருகின்றன . ஒவ்வொரு கலை வடிவங்களிலும் அதீத திறமை உள்ளவர்களாக தமிழ் மக்கள் பல்வேறு தேசங்களிலும் இருந்து வருகிறார்கள் . அவர்களுக்குரிய திறமைகளை பறை சாற்று வதற்கும் அவர்களுக்குரிய தனித்துவங்களை வெளிக் காட்டுவதற்கும் பல்வேறு களங்களும் அவர்கள் வாழுகின்ற சமூகங்களினால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டே வருகின்றன. யாழ் மண்ணில் ஒரு வித்தியாசமான பட்டப் போட்டி கடந்த ஆறு வருடங்களாக வடமராட்சி வல்வை மண்ணில் இடம்பெற்று வருகின்றது.








வரலாற்றுப் புகழ் கொண்ட வல்வை மண்ணில் தைத்திரு நாளன்று உதயசூரியன் கடற்கரை மைதானத்தில், பட்டப் போட்டி சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. இந்த வருடத்திற்கான போட்டி பல்லாயிரக்கணக்கான மக்கள் புடை சூழ மிகச் சிறப்பாக இடம்பெற்றது. யாழ் மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் மக்களுடைய படையெடுப்பு வடமராட்சி மண்ணை நோக்கியே இருந்தது. இதனை வல்லைவெளி போக்குவரத்து நெரிசலினூடாக அறிய முடிந்தது. வல்வை மண்ணைப் பொறுத்தவரை காலம் காலமாக பல்வேறுபட்ட சாதனையாளர்கள் தோன்றிய மண்ணாகவே இருந்து வருகின்றது. ஒவ்வொரு கலை வடிவங்களிலும் கை தேர்ந்த பலர் இந்த மண்ணில் இருந்திருக்கின்றார்கள். இப்போதும் இருந்து வருகின்றார்கள்

பட்டம் ஏற்றும் போட்டி என்பது உண்மையில் தமிழ் மக்களுடைய கலாசார பண்பாட்டு அம்சங்களின் பல அகப் புற வடிவங்களை கண் முன்னே தரிசிக்க நல்லதொருவாய்ப் பாக அமைகிறது. இந்தப் பட்டப் போட்டியை பொறுத்தவரையில் பல வர்ணவடிவான பட்டங்கள் என்ப தனை விடவும் சாதாரண, கற் பனைக்கு அப்பாற்பட்ட பல அரிய வடிவங்களினாலான பட்டங்கள் பலவும் வானில் பறந்து மக்களுக்கு பெரு விருந்தளித்தன. கப்பல்,விமானம்,மாட்டுவண்டி சவாரி,ரொக்கெட், சித்திரத்தேர்,மயில்,அன்னம் என பல வடிவங்களினாலான பட்டங்கள் வானில் பறந்தன .சுமார் முப்பந்தைந்து போட்டியாளர்களுக்கு மேல் கலந்து கொண்ட இந்தப் பட்டப் போட்டியில், போட்டியாளர் கள் அனைவரும் மிகச்சிறப்பாக தமது கலைப் படைப்புகளை மக்களுக்கு வான் வழியே காட் டிப் பாராட்டுக்களைப் பெற்றுக் கொண்டனர்.

ஆறாவது வருடமாகவும் இப் போட்டியை நடத்துகின்ற, போட்டி ஏற்பாட்டுக் குழுவினர்



பாராட்டப் படவேண்டியவர்களே .கடந்த வருடங்களை காட்டிலும் இம்முறை எதிர்பார்க்காத வகையில், மக்களை அனுசரித்து, சரியான ஒழுங்கமைப்புகளை மேற்கொண்டு அனைவரும் பார்க்கக் கூடிய வகையில் ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். இவர்கள் பாராட்டப் படவேண்டியவர்களே.

(22 ஆம் பக்கம் பார்க்க)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலண்டன் ஈழத்தமிழ் மாணவி ஒருவர் முதன்முறையாக சர்வதேச விண்வெளி ஓடத்திற்குச் செல்லவுள்ளார் என்ற செய்தி உலகத் தமிழர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

இலண்டனில் உள்ள பல மாணவர்கள் விண்வெளி தொடர்பாக கல்வி கற்று வருகின்றார்கள்.

செயற்கைக்கோளை விண்வெளிக்கு ஏவு வது, விண்வெளியில் இருந்து நில அளவை செய்வது எனப் பல்வேறு துறைகளில் சுமார் 30,000 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். இவர்களில் அதீத திறமைமிக்க 2 மாணவர்களை விண்வெளிக்கு அனுப்ப பிரிட்டன் விண்வெளி ஆராய்ச்சி மையம் முடிவெடுத்துள்ளது.

அதில் மிகத் திறமையாக செயல்பட்டு வெற்றி பெற்றுள்ளார் ஓர் ஈழத் தமிழ் மாணவி. அவர் பெயர் சியோபன் ஞானகுலேந்திரன். மற்றயவர் இலண்டனைச் சேர்ந்த டியானா.

சியோபன் மாணவி நுண்ணியல் உயிர்களைப் பற்றி நன்கு கற்று திறமை பெற்றிருக்கிறார். அத்தோடு விண்வெளி ஆராய்ச்சியிலும் ஈடுபட்டு அனைவரையும் திகைப்பில் ஆழ்த்தியுள்ளார்.

சர்வதேச விண்வெளி ஓடத்தில் சென்று இவரும் இவரோடு இங்கிலாந்து மாணவி டியானாவும் சேர்ந்து சில நுண்ணுயிர் ஆய்வில் ஈடுபடவுள்ளனர்.


www.sdb.lk

நிலையான வைப்புகளுக்கு
உயர்ந்த வட்டி

ஐந்து வருட நிலையான வைப்பொன்றுக்கு
10.75% உச்ச வருட வட்டி (முதிர்ச்சியில்)
வ.தே.வ. 8.98%

| | 3மாதம் | 6மாதம் | 1வருடம் |
|---|---|---|---|
| முதிர்ச்சியில் (வ.வ.வீ.) | 7.25% | 8.25% | 8.75% |
| வ.தே.வ. | 7.45% | 8.42% | 8.75% |

60 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளுக்கு 1 மில்லியன் வரை 15% வருட வட்டியும், 55 வயதுக்கு மேற்பட்ட சகல பிரஜைகளுக்கு அதி உயர் வட்டியும் உரித்தாகும்.

ஏனைய நிலையான வைப்புகளுக்கும் கவர்ச்சிகரமான வட்டி வீதம்

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள சணச அபிவிருத்தி வங்கிக் கிளையை நாடுங்கள்

011 5 411 411

சணச அபிவிருத்தி வங்கி பீஎல்சி
தேசத்தின் இன்னோடி



# இயற்கை அழகினைப் பாதுகாக்க....




HERBAL CARE
HOLLYWOOD STYLE

HESPERUS MARKETING (PVT) LTD.
No. 100, 5th Lane Colombo 03. Tel: 011 2576736/7
E-mail: hesperusm@gmail.com



Whirlpool®
HOME APPLIANCES



## மைக்ரோவேவ் அவன்கள்

வட்டியில்லா 12 மாத கொடுப்பனவு

Magicook 20S
- 20L கொள்ளளவு
- 800W வலு
- டச் ஃபில் கட்டுப்பாடு
- குழந்தைகளுக்கான பாதுகாப்பு

ரு.11.400

Magicook 20G - க்றில்
- 20L கொள்ளளவு
- 800W வலு
- க்றில் தொழிற்பாடு
- பல் வகை சமையல்

ரு.13.300

Magicook 20C - கன்வெக்சன்
- 20L கொள்ளளவு
- 300W வலு
- கன்வெக்சன் தொழிற்பாடு
- பல் வகை சமையல்

ரு.16.500

## குளிர்சாதனப்பெட்டிகள்

R600a
சுற்றாடல் தோழன் - குளிர்சாதனப்பெட்டி வாயு

10 வருட கொம்பரஸர் உத்தரவாதம்

WTA26
- கொள்ளளவு 242L
- நியோ ஜஸ்-சில்
- பக்டீரியா தடுப்பு
- டியோடரைசர்

ரு.76.900

வட்டியில்லா 15 மாத கொடுப்பனவு

மாற்றீட்டுச்சலுகை ரு.71,900

வட்டியில்லா 9 மாத கொடுப்பனவு

## குக்கர்கள் மற்றும் குக்கர் ஹூட்

கூட்டுச்சலுகை
ரு.85,000 மட்டுமே
ரு.8,000 தள்ளுபடி

ACM915TSWH
- கேஸ் பர்னர் 4
- கேஸ் கிறில் உடன் கேஸ் அவன்
- டைமர்
- அவன் அடுப்பு

ரு.78,800

AKR601
- ஸ்டேன்லஸ் ஸ்டீல்
- சார்க்கோல் பில்டர்
- 3 வேக கட்டுப்பாடுகள்
- 2 அடுப்புகள்

ரு.16,600

## சலவை இயந்திரங்கள்

EXPLORER 1055
- கொள்ளளவு 5.5Kg
- என்ட்டி எலர்ஜின் வெஸ்

ரு.87,900

3LWTW5550YW
- கொள்ளளவு 10.5Kg
- 6th சென்ஸ் டெக்னொலொஜி
- வோட்டர் எபிசன்ட் வெஸ்

ரு.109,900

*நிபந்தனைகளுக்குட்பட்டது. தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளுக்கு மாத்திரம்

ABS GARDINER DIXON HALL

வாழ்க்கையை இலகுவாக்கும் உற்பத்திகள்

011 2376000

நாடெங்கிலும் உள்ள Abans UNLIMITED காட்சியறைகளில் பெறலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால். 2016 ஜனவரி 20ஆம் திகதி வெளியிடப்பட்டது.